www.padippakam.com

அன்பளிப்பு U.K 30P Germany: 2.00DM, France: 6FF, Swiss: 2SF.

The EelaBhoomi

# ஈழபூமி

The Fortnightly Tamil Newspaper in London

ஆண்டு 1 வாரம் 13 05-07-1992 - 15-07-92




## இனப்பிரச்சனைத் தீர்வுக்கு ஏழு கட்சிகள் ஆலோசனை

(நமது நிருபர்)

இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணும் முகமாக ஏழு தமிழ் கட்சிகள் ஒருங்கிணைந்து ஒரு தீர்வை முன்வைத்துள்ளன என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஏழு தமிழ் முஸ்லிம் கட்சிகளும் இந்த தீர்வை விளக்கு முகமாக இலங்கையின் தேசிய அரசியல் கட்சிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தி வருகிறார்கள் என்று மேற்படி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நடந்து கொண்டிருக்கும் இருபகுதி உயிரிழப்புக்களை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில் முன்வைக்கப்பட்ட இந்தத் தீர்வை அரசு ஏற்றுக் கொள்ளும் விதத்தில் அரசைப் பணிய வைக்க இந்த ஏழு தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து தமிழ் காங்கிரஸ் கட்சியுடன் பேசி வருகிறார்கள் என்று பிறிதொரு செய்தி தெரிவிக்கின்றது.

இது இவ்விதமிருக்க, இந்த தீர்வு யோசனை பற்றி பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம் விளக்குவதற்காக கூட்டணியின் சார்பில் திருமாவை சேனாதிராசாவும், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அமைப்பின் சார்பில் அதன் செயலாளர் நாயகம் சுரேஸ் பிரேமச்சந்திரனும் சனிக்கிழமை (4-7-92) சந்திக்க இருக்கின்றார்கள் என்று கூறப்படுகின்றது.

## கொழும்பில் பல இளைஞர்கள் கைது

(எமது விசேட நிருபர் சேகரன் கொழும்பிலிருந்து)

கொழும்பு, கொழும்பை அண்டிய பகுதிகளில் வைத்து சுமார் 75 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். நீர் கொழும்பில் நிறுவப்பட்டுள்ள விசேட பயங்கரவாதத் தடை புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட இந்த இளைஞர்கள் தற்சமயம் துன்புறுத்தப்பட்டு விசாரிக்கப் படுகிறார்கள்.

இவ்வாறு கைது செய்யப் பட்டவர்கள் பலத்த சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு பின்னர் விடுதலை செய்யப் பட்ட போதிலும் புலிகளின் தீவிர ஆதரவாளர்கள் என்ற சந்தேகத்தில் 13 பேரை இன்னமும் தடுத்து வைத்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

இதில் படைகளினால் கொல்லப்பட்ட ரகீம் என்ற புலி உறுப்பினரின் சகோதரனும் அம்மாவும் அடங்குகிறார்கள் என்று அச்செய்திகள் அறிவிக்கின் றன.

## புலி உறுப்பினர்கள் சரண்!

(வவுனியா)

வவுனியா மாவட்டத்திலுள்ள நொச்சி மோட்டை என்னும் இடத்தில் வைத்து புலிகளின் மூன்று உறுப்பினர்கள் புளட் இயக்கத்திடம் சரணடைந்துள்ளனர் என்று புளட் இயக்கம் வவுனியாவில் அறிவித்துள்ளது.

இவர்கள் முறையே நிசன் என்று அழைக்கப்படும் துரைராசா பிரேமதாசன், அஜீத் என்று அழைக்கப்படும் சங்கானையைச் சேர்ந்த கயிலாயப்பிள்ளை கண்ணன், பாண்டியன் என்று அழைக்கப் படும் ரகுநாதன் பாலேந்திரன் ஆகியோரே இவ்வண்ணம் சரணடைந்தோர் என்று கூறப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க யக்கச்சி என்ற இடத்தில் வாகனம் ஒன்றில் சென்று கொண்டிருந்த புலிகள் மீது படைகள் தாக்கியதில் ஒன்பது பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. இவர்களுள் அந்த அணிக்குப் பொறுப்பாளராக இருந்த எல்லாளனும் அடங்குவார் என்று கூறப்படுகின்றது.

நொச்சி மோட்டையில் 3ஆம் திகதி புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் நடந்த சண்டையில் ஒரு பொது மகன் கொல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

முல்லைத் தீவில் புலிகள் வைத்திருந்த கண்ணி வெடியொன்றில் சிக்கிய பெண்மணி ஒருவர்கால் இழந்த நிலையில் வவுனியா ஆஸ்பத்திரிக்குக்கொண்டு வரப்பட்டு பின்னர் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

## அருகிலுள்ள முகாமில் சரணடையுங்கள்

# யாழ் நகரெங்கும் துண்டுப்பிரசுரம்

தமிழீழ விடுதலைப் புலிகளை சரணடையுமாறு இலங்கை அரசு ஹெலிக்கப்டர் மூலம் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளைச் சரணடையுமாறு கோரி யாழ் நகரமெங்கும் துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டுள்ளன என்று அங்கிருந்து கொழும்புக்குக் கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

புலிகளின் தலைவர் பிரபாகரன் யாழ் மக்களை கைவிட்டுச் சென்று விட்டார் என்றும் புலிகள் உறுப்பினர்களை அண்மையிலுள்ள இராணுவ முகாம்களில் சரணடையுமாறும் கோரும் துண்டுப் பிரசுரங்கள் யாழ் நகரெங்கும் கெலிகொப்டர்கள் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 2ஆம்,3ஆம் திகதிகளில் போடப்பட்ட இத் துண்டுப் பிரசுரங்கள் கணிசமான அளவு புலிகளை இராணுவத்திடம் சரணடைய வைக்கலாம் என்று அரச வட்டாரங்கள் நம்பிக்கை கொண்டிருக்கின்றன. தமிழில் எழுதப் பட்டுள்ள இத் துண்டுப் பிரசுரங்கள் புலிகளினால் இனிமேல் தொடர்ந்து தாக்குப் பிடிக்க முடியாது என்றும் மக்கள் புலிகளிடம் இருந்து தனிமைப் படவேண்டும் என்றும் கோருகின்றன. திடீரென வானில் தோன்றிய விமானங்கள் மூலம் போடப்பட்ட இத் துண்டுப் பிரசுரங்கள் யுத்தத்தின் நிமித்தம் சோர்வுற்றுப் போன இளைஞர்களை சரணடையத் தூண்டலாம் என்று அரசு நம்புவதாக அச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

பிரபாகரன் ஒரு பயங்கரவாதி என்றும் பல நாடுகளில் நடந்த கொலைகளுக்கு அவர் பாத்திரவாளி என்றும் இவரை நம்பி இனிமேலும் ஆயுதம் ஏந்துவது புலிகளுக்கு உகந்தது அல்ல என்றும் இத்துண்டுப் பிரசுரங்கள் வலியுறுத்துவதாக அறிய முடிகிறது.

கரையோரப் பகுதிகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்கும் இராணுவம் அடுத்த கட்ட நடவடிக்கைக்குத் தயாராக இருக்கின்றது என்று இராணுவத்தலைமைப் பீடப் பேச்சாளர் பிரட்மன் விரக்கோன்ம பத்திரிகையாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

மாதகல், சுழிபுரம் ஆகிய பகுதிகளில் குடிகொண்டிருக்கும் ஆக்கிரமிப்பு இராணுவம் எந்நேரமும் தாக்குதலை ஆரம்பிக்கலாம் என்ற காரணத்தினால் புலிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

ஆயுதங்களை நாட்டுக்குள் கொண்டுவருவதில் பெரும் சிக்கலை எதிர் நோக்கும் புலிகள் அடுத்த கட்ட நடவடிக்கையை முறியடிக்கக்கூடிய அளவு ஆயுதங்களை வைத்திருக்கிறார்கள் என்று புலிகள் தரப்பு வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

யாழ்ப்பாணத்தை பிடிக்கும் வரை தாக்குதல்கள் கட்டம் கட்டமாக தொடரும் என்று அங்குராற்பண வைபவம் ஒன்றில் ஆக்கிரமிப்பு அரச ஜனாதிபதி பிரேமதாஸ செய்தி விடுத்துள்ள அதே சமயம் பேச்சுவார்த்தை என்ற போர்வையில் ஏனைய தமிழ் குழுக்களுடன் கொழும்பில் கலந்தாலோசனை நடத்தி வருகின்றது என்று தமிழ் வட்டாரங்கள் விசனம் தெரிவித்துள்ளன.

இது இவ்விதமிருக்க, புலிகளின் தலைவர் மீண்டும் வன்னிக் காட்டுக்குள் புகுந்து விட்டார் என்றும் அவர் தற்போது மாங்குளம் காட்டில் ஒளிந்திருக்கின்றார் என்று தகவல் கிடைத்துள்ளதாகவும் இந்தத் துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆறு பேருக்கு மரண தண்டனை

(முல்லைத் தீவு)

புதுக் குடியிருப்பு என்ற இடத்திலுள்ள சிற்றூரவையில் உள்ள ஆறு பேருக்கு புலிகள் மரணதண்டனை விதித்துள்ளனர். அண்மைக் காலங்களில் இது போன்ற தண்டனைகள் பரவலாக இடம் பெற்று வருவதாக அறிய முடிகிறது.

இது இவ்விதமிருக்க மேலும் ஒன்பது பேருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர்கள் யாவரும் புலிகள் பற்றிய தகவல்களை அரச படைகளுக்குத் தெரிவித்தனர் என்ற பேரிலேயே மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான மரண தண்டனை எப்போது நிறைவேற்றப்படும் என்பது புலிகளினால் அறிவிக்கப்படாத போதிலும் அவர்கள் அனைவரும் தற்போது புலிகளின் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிய வருகின்றது.

இவ்வாறு தண்டனைக்குள்ளானவர்கள் அனைவரும் வவுனியா, விஸ்வமடு ,மன்னார் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்று குறிப்பிடப்படுகின்றது. மேற்படி மரண தண்டனைக்குரியவர்கள் ஏன் புதுக் குடியிருப்பு பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தனர் என்பது இன்னமும் தெளிவாகவில்லை.

ஏனைய அமைப்புகளில் இருந்தார்கள் என்ற குற்றச்சாட்டிலும் புலிகரளுக்கு எதிராக ஆரம்பகாலங்களில் செயற்பட்டார்கள் என்ற காரணத்தினாலும் சிலமாதங்களுக்கு முன்னர் வவுனியா மாவட்டத்திலுள்ள ஒரு கிராமத்தில் வைத்து கைது செய்யப்பட்ட விக்கினன், ராஜன் என்ற இரு இளைஞர்கள் புளியமரத்தில் கட்டி வைக்கப்பட்டு சுடப்பட்டது யாவரும் அறிந்ததே.

அனைத்து செய்திகளையும் தாங்கிவரும் தனித்துவமான பத்திரிகையே ஈழபூமி

படிப்பகம்

www.padippakam.com

அந்த மக்களே தமது விடிவிற்கான பாதையை தேர்ந்தெடுத்துப் போராட நாம் உதவவேண்டும். அதே வேளை தமிழீழப் பகுதிக்குள் வந்து குடியேறும் மக்களை சமத்துவமாக நடத்தி அவர்களையும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஒன்று கலக்கச் செய்யும் பணியும் அவசியமாகும். இதனை நாம் செய்து வருகிறோம்.

அது எனக்குத் தெரியும். அண்ணா தான் நாம் தமிழீழம் கேட்பது இன வெறி என்றும் தமிழீழம் என்று சொல்லாமல் ஈழம் என்று சொல்ல வேண்டும் என்கிறார். என்ற அந்த கதைக்கு முற்றுப் புள்ளி வைப்பவள் போல் அவசரமாகப் பேசிவிட்டுக் கேட்டாள்.

நாதன் சங்கருக்குக் கடிதம் போடக்கூடாதா? இப்பொழுது அதில் கொஞ்சம் நாணம் கலந்திருந்தது.

அவனுக்கு உள்ளூரச் சிரிப்பாக இருந்தது.

வேண்டாம் நிர்மலா. முகாமிற்கு செல்லும் கடிதங்கள் எல்லாம் படித்து தணிக்கை செய்தபின்பே கொடுப்பார்கள். உனது கடிதமும் அப்படிப் போவது நல்லதில்லை.

ஏன் அப்படி? கழகம் காதலிப்பதற்கும் திருமணம் செய்வதற்கும் எதிர்ப்பாக இருக்கிறதா?

அவள் வெடுக்கென்று கேட்டாள். புருவம் குறும் சிரிப்போடு உயர்ந்து தாழ்ந்தது.

அவன் அவசரமாக தலையாட்டி மறுத்தான்.

இல்லை. கழகம் காதலுக்கோ திருமணத்திற்கோ எதிர்ப்பாக இல்லை. காதல் திருமணம் என்பது சமூக அமைப்பில் சீதணத்திற்கும் சாதி பாகுபாட்டிற்கும் எதிராக இருப்பதால் நாம் அதை வரவேற்கிறோம். ஆனால் பிரச்சனை அதுஇவல்ல. முகாம் பாதுகாப்பு கருதி அங்கே உள்ளே வரும் கடிதங்களையும் வெளியே போகும் கடிதங்களையும் தணிக்கை செய்வது அவசியம். இந்த நடைமுறைக்கூடாக உனது கடிதம் போவது எனக்கு அழகாகப் படவில்லை. என்று விபரமாகக் கூறினான். அவள் சிரித்துக் கொண்டே கூறினாள்.

நான் நேரடியாக எனது பெயரைப்போட்டு காதல் கடிதம் எழுதப்போவதில்லை. அவரது சினேகிதன் ஒருவன் போல எழுதுவேன். என் கையெழுத்திலிருந்து அவருக்கு யார் என்று தெரிந்து விடும்.

அவள் விடை பெற்றுப் போகும் போது இரவு எட்டு மணிக்கு மேலாகிவிட்டது.

இரவுச் சாப்பாட்டை முடிக்கும் போது, அன்று செய்து முடிக்கப்பட வேண்டிய வேலைகள் பல குறையில் இருப்பது அவனுக்கு அங்கலாய்ப்பாய் இருந்து. மதியம் ஆமிக்காரனின் துப்பாக்கி வேட்டிலிருந்து மயிரிழையில் தப்பியதும் அந்த முதிய தம்பதியினரின் உபசரணையையும் நினைத்துப்பார்த்தான். இந்த அனுபவங்கள் மனதிற்கு இதமாக இருந்தன. சங்கர் இருந்தால் அவனிடம் ஒன்றும் விடாமல் சொல்லி மகிழலாம்.

திறந்திருந்த கதவைத்தட்டிக்கொண்டு பாரதி வந்தான். இவனைக்கண்டதும் உற்சாகத்துடன் அருகில் வந்து லேசாகத் தொட்டுக் கொண்டு அமர்ந்தான் ' கற்பகப் பிள்ளையார் கோவிலடியில் உன் சைக்கிளைக் கண்டம். உனக்குத் தான் ஏதும் நடந்திட்டோ என்று பயந்து போனம். நல்ல வேளை காயம் ஒன்றுமில்லையா'

அவன் கலக்கத்துடன் உடலை வருடிக்கொண்டு கேட்டான்.

அவன் சிறிய விழிகள் ஆச்சரியத்தால் அங்குள்ள ஒவ்வொரு பொருட்களையும் கண்டு அஞ்சுவது போலவும், துயரச்செய்திகளை சதா கேட்டுக் கொண்டு இருப்பது போன்ற சோகத்துடனும் அலைமோதிக்கொண்டிருந்தன.

நாதன் கேட்டான். ,,சைக்கிளுக்கு என்ன நடந்தது.

ஆமிக்காறர் ஜீப்பால் சைக்கிளை மிதித்து நெளிச்சுப்போட்டு போயிட்டாங்கள். சைக்கிள் இப்ப எங்கட பொறுப்பிலதான் றிப்பயருக்கு கிடக்குது. சைக்கிள் போனா பரவாயில்லை. நீ தப்பினதே போதும்.

நாதன் சிரித்துக் கொண்டான். பாரதி தொடர்ந்தும் பரபரப்போடு கூறினான்.

ஆமிக்காறர் வேற ரெண்டுபேரை ஏற்றிக்கொண்டு போறாங்கள்.

மௌனமான [illegible]த்தைச் சூடேற்ற வெறுப்பால் நிலத்தையே குனிந்து பார்த்துக் கொண்டிருந்தான். பாரதி தன் பாரம் எல்லாவற்றையும் இறக்குவது போல படபடவென்று மீதியையும் சொன்னான்.

செத்த பிறகு ரிவோல்வராலை தலையிலை சுட்டாங்கள். ரத்தம் ஏதும் வரவில்லை. இப்போது லைற் போஸ்டில் கட்டிப்போட்டிற்று காட்டிக்கொடுக்கிற சமூக விரோதி என்று எழுதி விடப் போறாங்கள்.

நாதன் பிரமை பிடித்தவன் போல் குழம்பி நின்றான். பற்களை தன்பாட்டில் லேசாக நறுமிக் கொண்டான்.


சீ! இப்படி அப்பாவி

[illegible]செய்து விட்டு வெளியேறினான் .

புதிய பொறுப்புக்கள் மனதுக்கு உற்சாகமாக இருந்தாலும் கூடவே ஒரு அச்சத்தையும் படரவிட்டது.

இவனுக்காக நிரந்தரமாக விசில் ஒன்று கொடுக்கப்பட்டிருந்து. அதை கழுத்தில் மாலையாகப் போட்டுத் தொங்க விட்டான். தன் பிளட்டூனைச் சேர்ந்த நாற்பது பயிற்சி வீரர்களையும் உடன் கூட்டுவதற்கு அந்த விசில் சத்தம் ஒன்றே அவனுக்கு போதுமானதாக இருந்தது.

தனிமையில் அவள் நினைவு வரும் வேளையில் மட்டும் அதை வலது கையில் காப்பு போல் சுற்றி அழகு பார்த்து மகிழ்வான்.




ஆர் அவங்கள் ஏது இயக்கமே. கலவரத்தோடு கேட்டான். இல்லை. அவங்கள் கோப்பிறட்டியிலை வேலை செய்யிற ஆக்கள்.

சிறிது நேர யோசனையின் பின் நாதன் கேட்டான். வேறு புதினம் இருக்கோ.

இருக்குது அதுதான் உன்னட்ட வந்தனான். என்றவன் குரலை மேலும் தாழ்த்திக் கொண்டு கலங்கித் தவிக்கும் விழிகள் மேலும் சோர்ந்து போகுமாப்போல சோகமாய்க் கூறினான். எங்கட இராணுவம் காலையில ஒரு சி.ஐ.டி என்று ஒருத்தனை பிடித்தவங்கள். அடிபோட்டு விசாரித்தாங்கள். அவன் எதுவுமே சொல்லவில்லை. ஆனால் அந்த ஆள் அடியில செத்திட்டான்.

நாதன் திகைத்துப் போய் குழம்பி அவனையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். பாரதி கலக்கத்துடன் மேலும் தொடர்ந்தான்.

பிறகு விசாரிச்சுப் பார்த்தில அந்த ஆள் சி.ஐ.டி இல்லையென்றும் கொஞ்சம் மூளைப் பிசகென்றும் தெரிஞ்சிருக்கு. அவன் அதைத் தாங்க முடியாமல் சோர்ந்து துவண்டான்.

மனித உயிர்கள் இவ்வளவு மலிவாகிவிட்டதா? முகம் தெரியாத அந்த அப்பாவி மனிதனின் அவலத்திற்காக தனக்குள் தவித்தான்.

அவனை நம்பி எத்தனை உயிர்கள் வாழ்கின்றதோ.

உயிர்களை கொன்றொழிக்கிறதுக்கு இவங்களுக்கு எப்படி மனசு வந்தது. விசாரணையென்றால் சாகிறமாதிரி அடிக்கிறதா. மிருகங்கள். சபித்துக் கொட்டினான்.

பாரதி அருகில் இருந்தவாறே சொன்னான்.

இதெல்லாம் சும்மா விடப்படாது. நாங்கள் வெளியிலை இதை மறைச்சாலும் உள்ளுக்க கேட்கத்தான் வேணும். கொமிட்டி மீற்றிங் வாற கிழமைதானை அதில் பார்ப்பம்.

நாதனும் ஆம் என்பதுபோல தலையாட்டினான்.

அன்றைய பொழுதின் உற்சாகம் குழம்பிய நிலையில் நாதன் அப்படியே விழுந்து படுத்தான்.

சங்கர் தன் பொறுப்பக்களை சரிவர நிதானப்படுத்திக் கொண்டான். ஒருவாரத்திற்கு முன்பு தான் அவன் இரண்டாம் இலக்க பிளட்டூன் சார்ஜண்டாக நியமிக்கப்பட்டான். முகாம் பயிற்றுனர் அந்தப் பதவியைக் கையளிக்கும் முன் கண்டிப்பாகக் கூறினார்.

இராணுவத்தில் பதவி உயர்வு திறமைக்கேற்ப கிடைக்கும். அதைச் சரிவர செய்யாவிட்டால் என்றுமே முன்னேற முடியாத வீழ்ச்சிதான். மிதவும் பொறுப்போடு கடமையைச் செய்ய வேண்டும்.

அவன் அட்டென்சன் பொசிசனிலேயே நின்று கேட்டுவிட்டு கம்பீரமாக திரும்பவும் இராணுவ சல்யூட் மரி

நிர்மலா அவனுக்கு கொடுத்த அந்த ஐம்பொன் வளையல் வழியில் தொலை



ந்து போனபின்பு ஏனோ அவ்வாறு செய்வதில் ஒரு திருப்தி. இந்த ரகசிய சமிக்ஞை அவனுக்கு மாத்திரம் புனிதமான அந்தரங்க ஆலிங்கனமாக்கும்.

அது எப்பொழுதும் அவனைப் பரவசப்படுத்தி ஒரு சோக உணர்வோடு அவனை வாட்டும்.

செத்தபிறகு றிவோல்வரால்
தலையிலை சுட்டாங்கள்
இரத்தம் ஏதும் வரவில்லை
இப்போ லைட் போஸ்டில்
கட்டிப்போட்டு துரோகி என்று.

இந்தா பார் நிர்மலா! நீ நினைக்கிற மாதிரி என்னால் வாழமுடியாது. நான் பல்கலைக்கழகப் படிப்பை முடித்து ஒரு கௌரவமான வேலை தேடிக் கொண்டு உனக்கு மாத்திரம் சொந்தமானவனாக வாழ என் மனம் இடம் தராது. இந்தச் சமூகத்தை மறந்து மனிதனாக என்னால் ஒருபொழுதும் வாழ முடியாது. எப்பொழுதும் சமூகப் பிரச்சனைகளோடு ஈடுபாடு காட்டும் மனிதனாகவே இருக்கப் பிரியப்படுகிறேன்.

(தொடரும்.)

"இந் நாவல் தனியொரு மனிதனின் படைப்பல்லபல தோழர்களின் ஆலோசனைகள், ஒத்துழைப்புகள் மூலம் உருவாக்கப்பட்ட கூட்டுப் படைப்பே இது. தமிழீழ விடுதலைப் போராட்டத் தில் கடந்த ஒரு வருட காலமாக நடைபெற்ற உண்மைச் சம்பவங்களிலிருந்தே இந்நாவல் உருப்பெற்றுள்ளது"
கோவிந்தன் மே 02 1985 (முன்னுரையிலிருந்து)

உங்கள் வீட்டில் நடைபெறும் சகல
மங்களகரமான வைபவங்களுக்குத் தேவையான
பூ மாலை, சரம் இன்னும் சகலவிதமான
பூ வேலைகட்கும்
தொடர்பு கொள்ளுங்கள்
விஜயா
313 Haydons Road
London SW19
☎ 081 543 2943

JEYAM ELECTRICAL AND PLUMBING
■ Plumbing ■ Heating
■ Electrical Work
■ Bathroom Tiling
■ Plastering
M Indoor & Outdoor Decoration
Also 24 hours Emergency work undertaken
For your information call
Jeyam on 081-903 4646

T.K Video
&
T.K Enterprises
110, Merton High Street
Wimbeldon
London SW 19
TEL : 081-544 1980
இலங்கையிலிருந்து
தருவிக்கப்பட்ட உணவுப்
பொருட்களுக்கும் ஒடியோ
வீடியோ கசற்றுகளுக்கும்
நாடுங்கள்

தரம் மிக்கவை தரத்தில் சிறந்தவை
நல்ல உணவு மலிந்த விலையில்
Cheap!
உதாரணமாக,
மரக்கறிச் சாப்பாடு (5 கறி, அப்பளம்)
1நூறு பேர் சபைக்கு தலா £2.00 (நூறிற்கு மேல் கழிவு கொடுக்கப்படும்)
மரக்கறிச் சாப்பாடு (5 கறி, அப்பளம், வடை, பாயாசம்)
1நூறு பேர் சபைக்கு தலா £2.25 (நூறிற்கு மேல் கழிவு கொடுக்கப்படும்)

| | | | |
|---|---|---|---|
| இடியப்பம் | £0.18 | தோசை | £0.25 |
| இட்லி | £0.30 | ஆட்டு இறைச்சிப்பிரியாணி | £3.25 |
| கோழி இறைச்சிப்பிரியாணி | £2.75 | மரக்கறிப் பிரியாணி | £2.50 |
| மரக்கறிச் சாப்பாடு | £2.50 | இறச்சி மீன் சாப்பாடு | £2.75 |

தனிச்சாப்பாடு இறைச்சி, மீன், மரக்கறிகள் தினசரி
விநியோகிப்படும்குறைந்த ஓடர் 3 சாப்பாடு மேற்படி விலைப்படி.
விபரத்திற்கும் கொள்ளவும். உங்கள் கொண்டாட்டங்களிற்குத் தேவையான
சகலவிதமான உணவுப் பண்டங்களிற்கும்
தொடர்பு கொள்ளுங்கள் ☎ 081 - 684 5967

படிப்பகம்

The EelaBhoomi

ஈழபூமி

ஆண்டு 1 வாரம் 12 05-07-1992 - 15-07-92

# தலையில்லாக் குண்டர்களின் தார்ப்பார்

சொந்த மண்ணில் மட்டுமல்ல அந் நிய மண்ணிலும் கூட தார்பார்கள் தலைவிரித் தாடுகின்றது என்பதைக் கேள்வியுறும் போது வெட்கமும் வேதனையும் எம் உள்ளங்களை ஆட்கொள்கின்றது.

வன்முறைக்கு வன்முறை தான் பரிகாரம் என்ற வழியைத் தேடிக் கொண்டது, ஆக்கிரமிப்பு அரசு எம் மக்களை ஆயுதம் மூலம் அடக்கும் போது நாம் உண்ணாவிரதமும் பகிஸ்கரிப்பும் என்று காலம் கடத்த முடியாது என்பதனாலேயே.

ஆனால் அந்த வன்முறை எம்மவருக்கெதிராகவே பாவிக்கப்படும் என்றால் அதனை நாம் உபயோகிக்க புறப்பட்ட அர்த்தமே தலைகீழாகிவிடும். இதனை யார் செய்தார்கள் என்பது ஈழபூமியைப் பொறுத்தவரை முக்கியமல்ல. இதனைச் செய்பவர்கள் காட்டுமிராண்டிகளை விடக் கேவலமானவர்கள் என்பதை மக்கள் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும் என்பதே இந்தப் பத்திரிகையின் எண்ணமாகும்.

கனடாவில் ரொறென்ரோ என்னும் மாநிலத்தில் இயங்கிவரும் சங்கமம் என்னும் வானொலி நிகழ்ச்சியை தயாரித்து வழங்குபவரான இளைய பாரதி என்பவர் அண்மையில் அந்நிய மண்ணிலே வைத்து சுடப்பட்டார் என்ற செய்தி காட்டுத் தீ போல புலம் பெயர்ந்தோர் மத்தியில் பரவியது யாவரும் அறிந்த சம்பவம். ஏதோ ஒரு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தான் அவரை அவரது இல்லத்தில் வைத்து அதிகாலை இரண்டு மணியளவில் சுட்டுக் கொல்ல முயற்சித்தார்கள் என்று அறிய முடிகிறது. கந்தையா சிவசோதி என்ற பெயருடைய இவர் இலங்கை வானொலியிலும் வேலை பார்த்தவர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

ஆயுதத்தால் மனித சுதந்திரத்தை அடக்கிவிட முடியும் என்று கங்கணம் கட்டித் திரியும் துப்பாக்கிப் பேய்கள், மக்கள்தான் இறுதியில் வெல்வார்கள் என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். தனி ஒரு பாரதியைச் சுட்டால் அந்தப் பாரதியின் சுவட்டில் ஆயிரம் பாரதிகள் உருவாவார்கள் என்பதை இந்த உயிர்தின்னும் முண்டங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

பேச வேண்டும் என்று கேட்ட மக்களைப் பேசாதே என்பதற்கும், எண்ணங்களை எழுத்தில் வடிக்க வேண்டும் என்று புறப்பட்ட மக்களை என்னை பற்றி மட்டுமே எழுது என்று துப்பாக்கி முனையில் ராச்சியம் நடத்துவதற்கும், ஈழத்தில் மட்டுமல்ல வெளிநாட்டிலும் நாம் வேட்டையாடுவோம், மனிதர்களை வேட்டையாடுவது எமது பரம்பரைத் தொழில் என்று துப்பாக்கிகள் சகிதம் அலையும் பிணம் தின்னிப் பேய்கள், வரலாற்றைச் சற்றுப் புரட்டிப் பார்க்க வேண்டும். துப்பாக்கிக் குழல்களை அடைத்த பேனாக்கள் ஆயிரம் உண்டு.

பாரதி, சரியான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தாரா அல்லது இல்லையா என்பது எமக்கு தெளிவாகத் தெரியாது. ஆனால் அவருக்கு துப்பாக்கிச் சூடு பரிசல்ல என்பது எமக்கு மட்டுமல்ல ஈழபூமி வாசகர்கள் அனைவருக்கும் தெரிந்த ஒரு விடயம். பிரச்சாரம் செய்ய சங்கமம் நிகழ்ச்சியில் இடம் கொடுக்கவில்லை என்பதற்காக அவரைச் சுட்ட அந்த இயக்க கனவான்கள் இறுதியில் ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொண்டால் சரி. சாவைப்பற்றிக் கவலைப் படுவோருக்கே துப்பாக்கி களும் குண்டுகளும் மிரட்டலாக அமைய முடியும். இலட்சியத்திற்காக ஏற்கெனவே இறந்துவிட்டவனுக்கு துப் பாக்கிகள் என்ன குண்டுகள் என்ன எல்லாம் சர்வ சாதாரணமே!.

# வடக்கும் தெற்கும்

ஆனந்தன் பற்கள் தெரிய சிரித்துக் கொண்டாலும் அவன் அகத்திலே படர்ந்திருந்த சோகம் பளிங்கிலே விம்பம் போலத் தெரிந்தது. சில சோகங்களையும் இலட்சியத்திற்காக தாங்கிக் கொண்டவன் என்றமையால் அவனால் உதட்டளவில் சிரிக்க முடிந்தது.

'என்ன மச்சான் மணியண்ணையின்ரை கடையிலை போய் ரீ அடிப்பமே' ஆனந்தனின் நண்பன் வினவிய போது அந்த நால்வரிடமும் இனப்பிரச்சனைக்கு தீர்வு வைப்பது போல் இழு பறி வந்தது. இருந்தாலும் விட்டுக் கொடுப்புகள், நாலா பக்கமும் ஏற்பட்ட பேச்சுவார்த்தைகள் மணியத்தின் கடையிலேயே ரீ குடிப்பது என்ற முடிவுக்கு அவர்களைக் கொண்டு வந்தது.

ஆனந்தன் ஒரு சாதாரண குடும்பத்திலிருந்து வந்தவன். வவுனியாவிலே ஒமந்தை என்னும் இடத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அவனது படிப்பு யாழ் பல்கலைக்கழகத்தில் இரண்டாவது ஆண்டுடன் முடிந்து விட்டது.

பெருத்த குடும்பம். எதை மறந்தாலும் மாலை ஐந்து மணிக்கு அரைப் போத்தில் கசிப்பு அடிக்காது விட்டால் ஆனந்தனின் தந்தைக்கு திருப்தியிருக்காது. சேமமடு வீதியிலே இருக்கும் அவனது வீட்டிலிருந்து சுமார் ஒரு மைல் தூரத்தில் இருக்கும் மருதங்குளம் என்னும் இடத்திலே அவர்களுக்கு ஒரு தோட்டம் உண்டு. அந்தத் தோட்டத்திலே பகல் எல்லாம் வேலை செய்யும் அவர் அலுப்பு போக்க பாவிக்கும் மருந்து தான் அரைப் போத்தல். சில வீடுகளில் கணவன் தினமும் குடித்து விட்டு வருவதே பொருளாதாரப் பிரச்சனையை விட மோசமாக இருக்கும் வேளையில் இங்கே நிலைமை வேறு விதமாக இருக்கும். ஆனந்தனின் அம்மா கனகம் கணவன் குடிப்பதை இட்டு சஞ்சலப்பட்டுக் கொள்வதில்லை. எட்டுப்பிள்ளைகளின் படிப்புச் செலவிலிருந்து வீட்டுச் செலவுகள் வரை எல்லாம் அந்தத் தோட்டத்திலிருந்துதான் வரும். அதனை கொண்டு வருபவர் ஆசைக்கு குடிப்பதை அவளால் தடுத்து நிறுத்த முடியவில்லை. அது கனகத்திற்கு ஒரு பிரச்சனையாகவும் இருக்கவில்லை.

சேமமடுச் சந்தியிலிருந்த பூவரச மரத்தில் சைக்கிள் களைச் சாத்திவிட்டு மணியத்தின் கடைக்குள் நுழந்தார்கள். ரவி,நாகேஸ்,சந்திரன் மூவரும் ஆனந்தனின் நீண்டகால நண்பர்கள். முதலாம் வகுப்பிலிருந்து ஒன்றாகப் படித்தவர்கள் என்றாலும் ஏ.எல். க்கு பின் ஆனந்தனுக்கு மட்டும் வளாகத்தில் படிக்கக்கூடிய சந்தர்ப்பம் கிட்டியது. விடுமுறை நாட்கள் மட்டுமல்ல,சனி ஞாயிற்றுக்கிழமைகளில் கூட ஆனந்தன் யாழிலிருந்து ஒமந்தைக்கு வந்துவிடுவான். அவனுக்கு சொர்க்க லோகத்தில் இடம் கிடைத்தாலும் பூவரச மரத்தடியில் நின்று மற்றைய மூவருடன் பத்து நிமிடம் கதைப்பதேயே அவனது வரப்பிரசாதமாக நினைப்பவன்.

அந்தப் பூவரச மரத்திற்கு என்று ஒரு தனி வரலாறு உண்டு. ஆம், ஒருபுறம் பிள்ளையார் கோயில் . மறுபுறம் பாடசாலை. இரண்டுக்குமே வயதுப் பெடியன்களுக்குத் தேவையான ஆட்கள் வந்து போகும் இடம்.

அந்த மரத்தடியில் உருவான காதல் காவியங்களும் உண்டு. அதே மரத்தடியில் உடைந்துபோன காதல் சாம்ராச்சியங்களும் உண்டு. ஆனந்தனுக்கு நினைவிருக்கிறது. சாந்தியை சம்மதம் கேட்பதற்காக ரவிக்காக தூது போன படலம்.

'மச்சான் ஆனந்தன். சாந்தியை நான் விரும்பிறன் மச்சான். போய்க் கேட்கவோ கடிதம் குடுக்கவோ பயமாய்க் கிடக்கு. நீ போய் ஒருக்கா கேட்டுச் சொல்லுவியா'

ரவி ஆனந்தனைக் கெஞ்சியபோது பரிதாபமாகவும் அதே வேளை ஆத்திரமாகவும் இருந்தது.

'டேய்!, காதலிக்கிறன் எண்டு சொல்ல தைரியம் இல்லை. பிறகென்னடா காதல். நான் சொல்லிறமாதிரிச் செய். அவளிட்டைப் போய் ஒரு புத்தகத்தை வாங்கு. நோட்ஸ் எடுக்கவேணும் நாளைக்குத் தாறன் எண்டு. திருப்பிக் குடுக்கேக்கை புத்தகத்துக்குள்ளை ஒரு கடிதத்தை வைச்சுக் குடு. பிரச்சனை முடிஞ்சுது. எப்பிடி என்ரை மாஸ்ரர் ஐடியா'

ஆனந்தன் சொல்லிமுடித்தபோது ரவி உடனேயே மறுத்து விட்டான். நேரே கேட்கவேணும். இல்லை என்றால் கடிதத்தை நேரே கொடுக்க வேண்டும். இது தான் ரவியினுடைய விருப்பம்.

முடிவில் நண்பனுக்காக அவன் சாந்தியிடண் விடயமறிவதாக ஒப்புக்கொண்டு அந்தப் பூவரச மரத்தை நோக்கிச் சென்றான். சாந்தி அதே பாடசாலையில் படிக்கும் ஒரு மாணவி. விஞ்ஞானத் துறையில் படித்துக் கொண்டிருந்தாள். ஆனந்தன் பூவரசமரத்தை நெருங்கியபோது உள்ளே ஒருவித பயம் குடி கொண்டது. முதல் முறை இராணுவ முகாமைத் தாக்கச் செல்லும் போது இருந்த சூழ் நிலையை அவன் உணர்ந்தான். இருந்தும் கேட்டே ஆகவேண்டும். திரும்பி வந்தால் ரவி குரைப்பான்.

சாந்தி வேறு இரு பெண்களுடன் உரையாடிக் கொண்டிருந்தாள். ஒருத்தி ஒல்லி. மற்றவள் அந்தப் பகுதி அரிசி எல்லாம் அவளே குத்தகைக்கு எடுத்தவள் போல காட்சியளித்தாள். ஏதாவது பெடியங்களைப் பற்றிய கதையாக இருக்கலாம். பிள்ளையார் கோயிலில் சாமி கும்பிட்டுக் கொண்டிருந்த சிலர் திரும்பிப் பார்க்கும் அளவுக்கு பெரிய சத்தமாகச் சிரித்தார்கள். ஆனந்தனுக்கு இதயம் சற்று வேகமாக அடிக்கத் தொடங்கியது. எப்படித் தொடங்குவது. சாந்தி! சற்று கரகரத்த குரலில் அழைத்தான். சாந்தி சிரிப்பில் மூழ்கியிருந்தது அவன் அழைப்பு காதில் விழவில்லை.

சாந்தி! அவன் மீண்டும் அழைத்தான். இந்தத் தடவை அவள் கவனம் ஆனந்தனை நோக்கியது.

'என்ன ஆனந்தன் கூப்பிட்டனிங்களா? சாந்தி வினவினாள்.

'ஓம்' உங்களோடை கொஞ்சம் கதைக்க வேணும் ஒருக்க வர முடியுமா? அவனின் கேள்வியில் எந்த விளக்கமும் மில்லாமல் இருந்தது. அவள் ஆம் என்பதற்குப் பதிலாக தலையசைத்தாள்.

சிநேகிதிகள் இருவரையும் பேசிக்கொண்டிருக்கும் படி கூறிவிட்டு ஆனந்தனுடன் சற்றுத் தூரம் விலகி 'என்ன விசயம்' என்று கேட்டாள்.

'ரவியைத் தெரியும் தானை உங்களுக்கு. என்னோடை ஆட்ஸ் படிக்கிறான். சயன்ஸ் ரவியில்லை. அவன் உங்களை விரும்பிறானாம். என்னை உங்களிட்டை கேட்கச் சொன்னான் அது தான்.......... ' என்று இழுத்தபோது அவளுக்கு உள்ளூரச் சிரிப்பு வந்தது.

'ஆனந்தன்! காதலிக்கிறன் என்று சொல்லவே துணிவில்லாத ஆளுக்கு என்ன காதல் இரண்டு பேரும் குறைஞ்சது பத்து மைல் தூரமாவது ஒண்டா பஸ்ஸிலை போறம். கிழமையிலை ஐஞ்சு நாள் இரண்டு பேரும் கதைச்சுக் கொண்டு வாறம். அந்த மடையன் விரும்பிறன் எண்டு ஒரு நாள் சொல்லியிருக்கலாமே! எப்ப கேட்பான் எண்டு நானும் தான் அவன் இருக்கிற சீற்றிலை போய் இருக்கிறது. அந்த பைத்தியத்திற்கு விளங்கினாத் தானே.'

அவள் பேசி முடித்த போது ஆனந்தனுக்கு வியர்த்தே விட்டது. அவள் முகத்தில் சிறிது நாணம் இடையிடையே தலைகாட்டினாலும் இப்படி வெளிப்படையாக பேசுவாள் என்று அவன் எண்ணவில்லை.

தூது வெற்றியுடன் முடிந்து விட்டது என்பது ஆனந்தனின் முகத்திலிருந்து வெளிப்பட்டதை தூரத்திலேயே கண்டு கொண்டான்.

தேத்தண்ணி ஆறப்போகுது மச்சான் குடியடா. சிங்களையில் ஆழ்திருந்த ஆனந்தனை மணியத்தின் கடைக்குத் திருப்பிக் கொண்டு வந்தான் நாகேஸ். அவன் யாராப் - பற்றி சிந்திக்கின்றான் என்பது அவர்கள் மூவருக்கும் தெரியும். அதனை ஆறுதல் சொல்வதற்காகவும் அவர்கள் ஞாபகப்படுத்த விரும்பவில்லை.

'மச்சான் அந்தா எல்வ்வானிலை பெடியள் வாறாங்கள். அம்பிட்டால் கரைச்சல். வாங்கோடா பின்வழியால் ஒடுவம்.' அவர்களின் கடந்த காலத் தொடர்புகளுக்காக இன்றும் ஒடி ஒளிக்க வேண்டிய நிலை. சுயநிர்ணயத்தைக் காக்க கொஞ்சக் காலம். உயிரைக் காக்க மிகுதிக் காலம். வரலாறு எப்படி எல்லாம் மாறியிருக்கிறது.

நால்வரும் சேமமடு வீதியால் ஒடி., மருதங்குளத்திலிருக்கும் ஆனந்தனின் தோட்டதின் பின்புறத்தால் மறைந்து அருகிலுள்ள காட்டுக்குள் சில மணி நேரங்களுக்குத் தஞ்சம் புகுந்து விட்டார்கள்.

(தொடரும்)




இத் தொடர் நவீனம் வடக்கிலும், தெற்கிலும், கைதிகளாயிருந்த ஒரு இளைஞனையும் ஒரு யுவதியையும் பற்றிய உண்மைச்சம்பவத்தை மையமாக வைத்து எழுதப்பட்ட கதை இக் கதையில் பாவிக்கப்பட்டிருக்கும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே.

இந்த இதழில் இடம்பெற இருந்த மார்க்சிசமும் தேசியமும் தொடர்ச்சி, எரிமலை நூல் விமர்சனம் ஆகியன தவிர்க்க முடியாத காரணத்தினால் அடுத்த இதழிலேயே இடம்பெறும் என அறியத் தருகிறோம்.

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# ஈழத்தில் நாடகக் கலை

ஈழத்தமிழரின் சமகால நாடகமுயற்சிகளைப் பற்றிக் கருதுகையில் புலம் பெயர்ந்தோரின் நாடக முயற்சிகள் பற்றிய குறிப்பும் மிகவும் அவசியமானது. காரணம் ஈழத்து நாடக உலகில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய தாஸீசியஸ், பாலேந்திரா ஆகியோர் அந்நிய மண்ணில் இருந் து கொண்டு தமது முயற்சியினைத் தொடர்வது ஈழத்தமிழரின் நாடகமுயற்சிகளின் தொடர்ச்சி என்றே கருதப்பட வேண்டும்.

சில தவிர்க் முடியாத வரையறைகளின் காரணமாக லண்டனில் நடக்கும் நாடக முயற்சிகளையும் முக்கியமாக தொலைக்காட்சிப் பதிவுகளிலிருந்தும் நாடகத்துடன் நேரடியாக சம்பந்தப்பட்ட கலைஞருடன் நடாத்திய உரையாடல்களையும் அடிப்படையாக வைத்தே இக் குறிப்பை அமைக்கக்கூடியதாக இருக்கின்றது.

தாஸீசியரின் நாடக முயற்சிகளில் சுவிஸ் தயாரிப்பாளருடன் அவர் இணைந்து தயாரித்த சிறி சலாமி என்ற நாடகம் சிறபானது. இதுவும் அவரது மீண்டும் பாரதம் மீண்டும் இராமாயணம் என்ற நாடகமும் ஈழத்தமிழரின் அரசியல் வரலாற்றை காட்டுகின்றது. இவை இரண்டிலும் மேடையின் பாவனையும் குறியீடுகளின் சிறப்பான உபயோகமும் குறிப்பிடத்தக்கன.

இவரது இந்த நாடகங்களில் காணப்படும் அசைவுகளும் ஆட்டங்களும் மேடையின் முழு விஸ்தாரத்தையும் சிறப்பாக கையாண்டிருக்கும் இலாவகமும் இவரது அரங்க ஆளுமையை நன்றாக வெளிக்காட்டுகிறது. இவரது குறியீடுகள் இவரது கற்பனைத் திறனை வெளிப்படுத்துகின்றன.

சிறிசலாமியின் நேர்த்திக்கும் அதன் சிறப்பான ஒலி,ஒளி அமைப்பிற்கும் சுவிஸ்காரர் பெரிதும் உதவியுள்ளனர். சிறிசலாமியில் காணப்படும் இந்த நேர்த்தியும் ஒத்திசைவும் மீண்டும் பாரதம் மீண்டும் இராமாயணம் நாடகத்தில் காணப்படவில்லை. இது பெருமளவில் ஒரு அவதியான அவதரிப்பாகவே தெரிகின்றது.

இதன் பின்னர் இவர் தயாரித்த சுந்தரலிங்கத்தின் அபசுரம் அவ்வளவாக சோபிக்கவில்லை. முற்பகுதியில் நாடகத்தின் சுருதியை அவர் பேணியிருந்தாலும் பிற்பகுதியில் பிரதியில் இருந்த வேகம் அசைவுகளிலோ ஒளி, ஒலி அமைப்பிலோ வெளிப்படவில்லை. இறுதிப் பகுதியில் தொய்வு தெளிவாகத் தெரிகிறது.

இவரது இந்த நாடகங்களில் செவிப்புல அரங்கத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. மிகக் குறைந்தளவு வார்த்தைகளையே உபயோகித்துள்ளனர். அசைவுகள், நிறங்கள் போன்ற கட்புல அரங்கக் கூறுகளையே முதன்மைப்படுத்துகிறார். இருந்தாலும் ஏனோ இவர் ஒளி அமைப்பிற்கு தக்க கவனம் கொடுக்கவில்லை.

இவரது அண்மைக்கால முயற்சிகள் சில புதிய நாடக வடிவங்களை பரீட்சிக்கும் முயற்சியாகவே அமைகின்றது. இது செய்திகளையும் உண்மையான நிகழ்வுகளையும் நிகழ்த்திக்காட்டுவதனை அடிப்படையாகக் கொண்ட உண்மையின் அரங்கம் (Theatre of fact) என்ற வடிவமே. இந்த நாடக வடிவம் அறுபதுகளில் ஐரோப்பாவில் கையாளப்பட்டு வந்தது. இதே போல முப்பதுகளில் அமெரிக்காவிலும் செய்திகளை நாடகமாக நிகழ்த்திக்காட்டியதினை நாம் காணலாம்.

புலம் பெயர்ந்து வாழ்பவர்கள் மத்தியில் தமது மண்ணின் நிகழ்வுகளையும் தாக்கங்களையும் இயலுமானவரை நேரடியாகத் தொற்றச் செய்வதை அடிப்படையாக வைத்தே இவ்வடிவத்தினை தான் அறிமுகப்படுத்தியதாக தாஸிசியஸ் கூறுகிறார். இதனை இன்னமும் சிறப்பாகச் செய்வதற்கு கள அரங்கம் (Forum Theatre) என்ற நாடகவடிவினை பரீட்சித்து வருகிறார். இது பார்வையாளரும் நாடகத்தில் கலந்து கொண்டு அந்த உணர்வுகளை உள் வாங்குவதோடு தமது அனுபவங்களையும் மேடையில் பகிர்ந்து கொள்வதை அடிப்படையாகக் கொண்டது. இந்த இரு வடிவங்களும் எந்த வித கலைத்துவ வரையறைகளுமின்றி யதார்த்தத்தை நிர்வாணமாகத் தரிசிக்க வைக்கும் வடிவங்களாகும்.

இவரது நாடக முயற்சிகள் ஆத்மாத்த தேடலிநடியாக உருவாவதிலும் பார்க்க தொழுநுட்ப அடிப்படியிலேயே உருவாக்கப்பட்டுள்ளன. இவரது கருத்துக்களும் இதனை உறுதிப்படுத்தவே செய்கின்றன. இவரது கருத்துக்கள் பல முரண்படுகின்றன. அவரது சில கருத்துக்கள் தர்க்கரீதியான உறுதிப்பாடு இல்லாத எழுந்தமானமான கருத்துக்களாக அமைந்துள்ளன.

பாலேந்திராவின் அவைக்காற்றுக் கழகத்தினர் அதிகமாக மொழி பெயர்ப்பு நாடகங்களையே மேடையேற்றுகிறார்கள். சம்பவ ஒருமை, சம்பவ குறியீட்டுத் தன்மை கொண்ட பிற மொழி நாடகங்களையே தெரிவு செய்கின்றனர். மொழி பெயர்ப்பு நேரடியான மொழிபெயர்ப்பாக அன்றி ஆக்க மொழி பெயர்ப்பாகவும் சமூக மாறுபட்ட மொழி நடையுடனும் அமைகின்றன. இந்நாடகங்கள் நாடகவடிவத்திற்காக, அல்லது நாடகப்பிரதியின் கலைத்தன்மையை முக்கியமானதாகக் கருதி தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இவர்களது நாடகங்கள் மேலைத்தேய அரங்கத் தன்மைகளையே அதிகளவில் கொண்டுள்ளன. மேடையசைவுகளும் மேடைப்பாவனையும் மிகக்க குறைவாகவே உள்ளன. இவர்களது நாடகங்களில் கட்புல அரங்கம் அவ்வளவாக முக்கியத்துவம் பெறாவிடினும் ஒளி அமைப்பு திறமையாக கையாளப்பட்டுள்ளது.

அண்மையில் இவர்கள் தமிழ் சிறுவர்களைக் கொண்டு மௌனகுருவின் வேடரை உச்சிய வெள்ளைப் புறாக்கள் என்ற நாடகத்தை தயாரித்திருந்தார்கள். தமிழில் லண்டனில் சிறுவர் அரங்கத்தை அறிமுகப்படுத்தியிருப்பது பாராட்டிற்குரியது.

இவர்களது தயாரிப்பான எரிகின்ற எங்கள் தேசம் என்ற கவிதா நிகழ்வு இவர்களது திறமையை நன்கு வெளிக்காட்டியது. இந்த முயற்சியை கொச்சைப்படுத்தும் விதத்தில் சில விசமிகள் பிரச்சாரம் செய்திருந்தனர். இக்கால கட்டத்தில் இப்படியான விசமத்தனமான பிரச்சாரங்கள் ஈழத்தில் இருப்பதைப் போலவே புலம் பெயர்ந்தோர் மத்தியிலும் இருப்பது வருந்தத் தக்கது.


உண்மையில் எரிகின்ற எங்கள் தேசம் கலைத்துவ உணர்வையும் ஈழத்து வாழ்நிலை உண்மையையும் இணைத்து நிற்கும் ஒரு தரமான கலை வெளிப்பாடு. ஈழத்தமிழரிடையே அண்மைக் காலங்களில் வெளிவந்த கவிதா நிகழ்வுகளில் மிகவும் தரமான படைப்பு இது என்றால் மிகையாகாது.

## கலைப் பக்கம்

அவைக்காற்றுக் கழகத்தினரின் நாடக முயற்சிகள் கலைஞனின் ஆத்மாத்தத் தேடலின் வழியாகத் தோன்றும் கலை வெளிப்பாடுகள். இந்த வகையில் இவர்களது முயற்சிகளுக்கு தனிமதிப்பும் தனித்துவமான ஒரு இடமும் உண்டு. இவர்களது ஒவ்வொரு முயற்சியும் கடின உழைப்பின் அடிப்படையிலேயே சாத்தியப்படுகிறது.

புலம் பெயர்ந்தோரின் நாடக முயற்சிகள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் நடைபெறுகிறது. மேலைத்தேயத்தின் இயந்திரமய வாழ்விற்கும் நாளாந்த வாழ்வின் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் நடிகர்களை இணைத்து நாடகம் போடுவது இலேசான காரியமல்ல. தாஸீசியசின் அண்மைக்கால முயற்சிகள் கூட ஒரு கலைஞனின் கலைத்துவ முதிர்ச்சியினடியாக ஏற்படும் வடிவக்கூர்ப்பின் வெளிப்பாடேயல்லாது, இந்த நெருக்கடிகளுக்கு ஈடுகொடுத்து அதிக பயிற்சியின்றி அதிக ஆயத்தங்கள் இன்றி மேடையேற்றப்படக்கூடிய வகையில் தெரிவு செய்யப்பட்டுள்ள வடிவங்களாகவே தென்படுகின்றன. இவர்களது நாடக முயற்சிகள் இவர்கள் வாழும் இடங்களில் ஈழத்தமிழ் சமூக அமைப்பை ஏற்படுத்தும் ஒரு கலாச்சார கூறு என்ற வகையிலேயே அமைகிறது. ஆனால் இதனிலும் மேலாக இவர்களது நாடக முயற்சிகள் எமது கலாச்சாரச் செழுமையினை மேற்குலகிற்கு எடுத்துக்காட்டும் கலை வடிவமாக மாற வேண்டும். அத்துடன் ஈழத்தில் வாழும் நாடக எழுத்தாளர்களான குழந்தை. சண்முகலிங்கம், மௌனகுரு, ஆனந்தராஜா போன்றவர்களின் நாடகங்களை மேடையேற்றுவதன் மூலம் தேக்கம் கண்டுள்ள ஈழத்து நாடக எழுத்தாற்றலை ஊக்கிவிக்க வேண்டும். அப்போது தான் ஈழத்தமிழரின் நாடக வரலாற்றில் ஒரு காத்திரமான பங்களிப்பாக இம்முயற்சிகள் அமைய முடியும்.

முற்றும்



எரிகின்ற எங்கள் தேசம்

## கொட்வின் கொன்ஸ்ரன்டைன்

நாம் வித்தியாசமானவர்களே தான். ஆயிரம் ஆயிரமாய்ப் பணத்தை விரயம் செய்து கொண்டாட்டம் போடும் அதே நேரம் அங்கே ஆயிரம் ஆயிரமாய் உயிர்கள் குண்டினாலும் பசியாலும் பலியாகிக்கொண்டிருப்பதை உணருவதில்லையே. அரங்கேற்றமும் ஆடம்பரங்களும் இங்கே மனிதர்களை ஆட்டிவிக்கும் போது அரைவயிறுக்குக் கூட வழியில்லாமல் அங்கே மக்கள் வாடிக் கொண்டிருப்பதை உணருவதில்லை. புரட்சியைப் பற்றிப் பேசுபவர்களும் நாட்டின் மீது அக்கறை கொண்டவர்களாகக் கூறிக்கொள்பவர்களும் கூட டிஸ்கோவுக்கு செலவு செய்வதில் அரைப்பங்கு பணத்தை அநாதைப் பிள்ளைகளுக்கு கொடுக்க வேண்டும் என்று உணர்ந்து கொள்ளாதவர்கள். ஒருவரின் மகளுக்கு அரங்கேற்றம் ஐயாயிரம் பவுணிலே நடந்தால் மற்றவர் இங்கே ஆறாயிரம் பவுணிலே தன் புதல்விக்கு அரங்கேற்றம் செய்ய அலைந்து திரிகின்றார். இரண்டு வயதுக் குழந்தை ஆசைப்பட்டால் பிறந்தநாள் கொண்டாடலாம். இருபது வயது நிரம்பிவருக்குகேன் பிறந்தநாள். அங்கே உறவுகள் ஒப்பாரி இசைக்க இங்கே பங்கரா பாட்டுக்கு ஆடும் கூட்டம் அதிகரித்துவிட்டது. ஒரு நாட்டினுடைய சூழ் நிலைக்கேற்ப தங்களை மாற்றிக் கொள்வதில் பிழையில்லை. ஆனால் இங்கே தங்களையே மாற்றிக்கொள்பவர்களைப் பற்றித்தான் என் கவலை தெரிவிக்கப்படுகிறது. நாம் பாத்திரவாளிகளோ இல்லையோ நடந்து விட்ட யுத்தத்தில் இழந்துவிட்ட எம்மவர்க்காக நாம் வருந்தியே தீர வேண்டும். நாளொன்றுக்கு பத்துப் பவுணுக்கு சிகரெட் பிடிப்பவருக்கு பத்துப் பென்ஸ் அநாதைப் பிள்ளைகளின் சங்கத்திற்குக் கொடுக்க முடியவில்லை என்பது விசனமே. அங்கும் பக்கத்து வீட்டுப் பரிமளம் பியூட்டிக்குயின் சாரி கட்டினால் முன் வீட்டு முத்தம்மாவுக்கு நதியாசாரி தேவைப்பட்ட அதே வழித் தோன்றல்கள் இங்கேயும் ......... என்செய்வேன் தமிழ் கோத்திரத்திற்கு உள்ள குணம்....

# அன்பு நண்பனுக்கு.

அன்புள்ள நண்பா!

நாம் நலம் என்று கூறி எம்மை ஏமாற்றிக் கொள்ள வேண்டாம். எனவே விடயத்திற்கு வருகிறேன். உன் மனப்பார்வையில் நான் இங்கே சொர்க்கலோகத்தில் தேவதைகள் வலம் வர வாழவில்லை. உனக்காவது எமது சொந்த நாட்டிலே வாழ்கின்றேன் என்ற நின்மதி உண்டு. இங்கே நாம் அகதி. அகதி என்ற சொல் எமது பூரண நிலையை விளக்க உதவும் என்று எண்ணுகிறேன்.

அன்பனே!. நாம் ஒரு ஊரிலே பிறந்தவர்களும் அல்ல. ஒரே பள்ளிக்கூடத்தில் படித்தவர்களும் அல்ல. இருவருமே ஈழம் என்ற இலட்சியத்திற்காக பயிற்சி முகாமிலே சந்தித்தவர்கள்.

நாம் அடிமையாக வாழ முடியாது என்று எண்ணி எம் சொந்த நலங்களைத் துறந்து பொது நலத்துக்காக எம்மை அர்ப்பணித்ததை எவரும் மறுக்க முடியாது.

ஆனால் இன்று என்ன நடந்தது? என்கேள்வியின் பின்னெ இருக்கின்ற கேள்விக்குறி போலவே எம் போராட்டமும் வாழ்க்கையும் ஆகிவிட்டதே. அன்பனே! எமது மக்கள் உரிமையைக் கேட்டபோது நடந்த அநியாயங்கள். எங்கள் சகோதரிகள் மீது ஸ்ரீ லங்கா இராணுவம் அவிழ்த்து விட்ட பலாத்காரம் இப்படி எத்தனை கொடுமைகளுக்கு மத்தியில் எம் மண்ணின் புனிதப் போராட்டத்தை எடுத்துச் சென்றோம்.

எத்தனை பேருக்குச் சொல்லியிருப்போம் எங்கள் எதிரி யார் என்று நாம் கண்டு கொள்ள வேண்டும் என்று. இன்று என்னடா நடந்தது. வவுனியா தாண்டிக்குளம் முகாமிலிருந்து நீ கடிதம் போடும் போது என் இதயம் வெந்து துடிப்பது எனக்கு மட்டும் தான் தெரியும். எனக்குத் தெரியும் நான் மட்டும் அந்நிய மண்ணிலே அடிமை இல்லையா என்று நீ கேட்பாய் என்று. ஒரு காலத்தில் எம்மை அடிமை கொண்ட ஒரு நாட்டிலே நான் தஞ்சம் புகுந்ததையும் நாட்டுக்குள்ளேயே எம்மை அடிமை கொண்ட நாட்டிலே நீ தஞ்சம் புகுந்ததையும் நீ சரிப்படுத்த முனையாதே. நீ சொல்கின்ற காரணங்களை நான் ஏற்கவில்லை என்று அல்ல. நீ கடந்த வாரம் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தாய், புலிகளின் செயல்களினால் நான் இவ்வாறு தஞ்சம் அடையவேண்டி வந்து விட்டது என்று. உன் உயிரைப் பாதுகாக்க நீ எதிரியிடம் சரண் புகுந்திருப்பதை என்னால் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அது மட்டுமல்ல., புலிகளை எதிரிக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு எமது மக்களுக்கு எதிராக நீ செயல்படுவது எந்த வகையிலே நியாயம். சித்தாந்தம் சித்தாந்தம் என்று கத்தித் திரிந்த நாங்களே இப்படிச் செய்தால் கூட்டணிக்கும் எங்களுக்கும்என்ன வித்தியாசம் இருக்கும் என்று நீ எண்ணுகின்றாய்.

நண்பனே! உன்னால் எப்படியடா எங்கள் தமிழீழ மண்ணில் ஒரு அந்நிய அரக்கப் படையுடன் நின்று கொண்டு செயலாற்ற முடிகிறது. உன் இரத்தம் கொதிக்கவில்லையா? உன் உயிருக்கு ஆபத்து என்றால் அந்த உயிருக்கு எதனால் ஆபத்து என்று கண்டுபிடித்து அதனை எதிர்க் வேண்டிய வழிகளை நீ தேடு. முடியாவிட்டால் போராட்டத்திற்கு இடைஞ்சலாக இல்லாமல் ஒதுங்கியிருக்கப்பார்.

என்குத் தெரியும் அன்றுழைத்து அன்றே உண்ணும் ஒரு வறிய குடும்பத்தில் இருந்து வந்தவன் நீ. கொழும்பிலே வந்திருந்து குடித்தனம் நடத்த உன் னிடம் பணம் இல்லை என்று. அது மட்டுமல்ல உமா மகேஸ்வரன் போல் கொள்ளை அடிக்கக்கூடிய திறமை இருந்திருந்தால் நீயும் இங்கே வந்திருக் கலாம். அல்லது என்னைப் போல் காணி பூமி இருந்திருந்தால் அதனை வித்து தொலைத்து விட்டு அந்த பாளாய்ப போன பேய் உலாவும் பூமி வேண்டாம் என்று விட்டு விட்டு ஒடி வந்திருப்பாய்.

உன்னிடம் ஏதும் இல்லை. அந்த சின்ன ஒலைக் குடிசையைத் தவிர . உன்னாலும் ஒன்றும் செய்ய முடியாது தான். அன்று எம்மை சிறையிலே கட்டி வைத்து உதைத்தவனுக்கு இன்று நீ நேசக் கரம் நீட்டியிருப்பது என் க்கு கவலை அளிக்கிறது. இருப்பினும் போராட்டம் எது. எதிரி யார் என்று தெரியாமல் கொலைகள் விழும் போது உன்னால் வேறு என்ன தான் செய்ய முடியும்.

இறுதியாக, சில வார்த்தைகள். எனது முகவரியை மாற்றி விட்டேன். இங்கே முகவரிகள் மாறுவதும் அங்கே முகவரிகள் தொலைவதும் இன்று சகசமாகிவிட்டது. எனவே நான் இதற்கு முதல் எழுதிய கடிதத்தில் உள்ள முகவரிக்கு உன் விரிவான பதிலை அனுப்பு. உன் எதிரியைப் பழி வாங்குகிறேன் என்று எண்ணி உன் மக்களைப் பலி கொடுக்காதே. அவர்களுக்கு மன்னிப்புக் கிடைத்தாலும் கிடைக்கும் உனக்கு மன்னிப்பு இந்த ஜென்மத்தில் கிடைக்காது.

நாம் இருவரும் தோற்கவில்லை. ஏமாற்றப்பட்டு விட்டோம். ஏமாற்றங்கள் பாதையை மாற்றக்கூடாது. அவை குறுகிய காலத்திற்கு மனக் கசப்பைக் கொடுக்கும் சம்பவங்களே. எமது இலட்சியப் பாதையில் நாம் நடப்பதற்கு இன்னும் காலம் கடந்து விடவில்லை என்று எண்ணுகின்றேன்.

இப்படிக்கு உன்

முகவரி மாறிய நண்பன்.



www.padippakam.com



**இந்தியா பிரேமாவிடம் பிரபாகரனைப் பிடித்துத்தரும் படி கேட்ட போது தம்பி பிழை விட்டால் பக்கத்து வீட்டுக்காரனா தண்டிப்பது என நாசுக்காக கதைத்தார்**

# பிரேமதாசா எப்படிப்பட்ட மனிதர்



தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சனைக்கு எந்தவொரு உருப்படியான தீர்வுத் திட்டத்தையும் பிரேமதாஸ முன்வைக்கப்போவதில்லை என்பதை புலிகள் நன்கறிவார்கள். கொழும்பு மாலிகாவத்தை வாசஸ்தலத்தில் இரவிரவாக பிரேமதாஸ நடத்திய அரசியல் பிரித்தோதல்களிலிருந்து இதை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். ஒற்றையாட்சியின் மகத்துவம் பற்றியும் விட்டுக் கொடுப்பின் முக்கியத்துவம் பற்றியும் ஆயுத வன்முறையின் அர்த்தவீனம் பற்றியும் அமைதியான மென்முறையின் ஆன்மீகச் சிறப்புப் பற்றியும் தொடர்ந்து நடந்த போதனைகள் புலிகளின் சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தியது. பிரபாகரன் ஒரு தேசிய வீரர். அவர் இலங்கை இராணுவத்தின் பிரதம தளபதியாக பதவியில் அமர்த்தப்பட வேண்டியவர். புலிப் படை சிங்கள இராணுவத்துடன் சங்கமமானால் இந்திய வல்லாதிக்க பூதம் இலங்கையை அச்சுறுத்த முடியாது என்று பிரேமதாச பொறிகள் வைத்துப் பேசியதன் அர்த்தத்தையும் புலிகள் உணராமலில்லை.

கலந்தாலோசனை, கருத்தொற்றுமை எனப்படும் போதிசத்துவரின் தத்துவப் பாதையால் சென்று விட்டுக் கொடுப்பு எனும் சமாதானப் பொறியில் விழுந்துவிட புலிகள் தயாராக இல்லை. பிரேமதாஸ தத்துவம் பேசி காலத்தைக் கடத்தி வருகிறார் என்பதையும், அவர்கள் உணர்ந்து கொள்ளத்த தவறவில்லை. தமிழரின் அடிப்படைப் பிரச்சனைகள் பற்றிப் பிரேமதாஸவுடன் பேச்சுக்களை நடத்தி ஒரு நியாயமான நிரந்தரத் தீர்வைக் காண முடியாது என்பதை நன்கு புரிந்து கொண்ட புலிகள் ஒரு இடை

துகிறார்கள் என்று உணர்ந்து கொண்ட அவர் இந்தச் சிக்கலிலிருந்து நழுவிவிட வேறு உபாயங்களை பற்றிச் சிந்தித்தார்.

ஆறாவது திருத்த சட்டத்தை நீக்க யாப்பு திருத்தப் படவெண்டும். அதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் தேவை. இது கலந்தாலோசனை, கருத்தொருமைப்பாட்டின் அடிப்படையில் சகல கட்சிகளினதும் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட வேண்டிய விவகாரம் என்ற ரீதியில் புலிகளுக்கு நழுவல் கதை சொல்லி வந்த பிரேமதாஸ சர்வ கட்சி மாநாடு ஒன்றைக் கூட்டினார்.

கட்சி என்ற பெயரில் அரசியல் விபச்சாரம் செய்து வந்த தனிமனித தலைவர்கள், குழுக்கள் எல்லோருக்கும் சர்வகட்சி மாநாடு என்ற மேடை அமைத்துக் கொடுக்கப்பட்டது. அரசியல் அஞ்ஞானவாசத்தில் ஒதுக்கப்பட்டிருந்த அநாமதேய குழுக்கமும் மக்களின் பிரதிநிதிகளாக இம் மாநாட்டில் கலந்து கொண்டனர். கலந்தாலோசனை என்ற போர்வையின் கீழ் ஒன்றுக்கொன்று முரண்பட்ட பலதரப்பட்ட கருத்துக்களை உடைய ஒரு சாம்பார் மநாட்டில் கருத்தொருமைப்பாடு ஒருபோதும் ஏற்படாது என்பதை போதிசத்துவர் நன்கு அறிவார். தமிழர் பிரச்சனையை முடிவில்லாமல் இழுப்பதற்கும் புலிகளின் தனித்துவத்தையும் முக்கியத்துவத்தையும் குறைத்து விடுவதற்கும் இது ஒரு சிறந்த சனநாயக வழி என பிரேமதாஸ எண்ணினார். இந்த நோக்கில் சர்வ கட்சி மாநாட்டிற்கு முதலுரிமை வழங்கிய பிரேமதாஸ புலிகளையும் இம்மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு அழுத்தம் போட்டார்.




க்காலத் தீர்வுக்காவது முயற்சிசெய்யலாம் என்ற முடிவுக்கு வந்தனர். இந்த நோக்கில் இரண்டு கோரிக்கைகளை பிரேமதாஸவிடம் முன்வைத்தனர். அரசியல் யாப்பின் ஆறாவது திருத்தச் சட்ட மூலத்தை மாற்றி மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு பிரேமதாஸவை கேட்டுக் கொண்டனர் . தற்காலிகமான முறையில் வடகிழக்கு மாகாண ஆட்சிப் பொறுப்பை ஏற்று புனர்வாழ்வு புனர் நிர்மாண வேலைகளில் இறங்கி மக்களின் மேம்பாட் டிற்கு உருப்படியான சில கருமங்களைச் செய்யலாம் என புலிகள் எண்ணினர்.

புலிகளின் யோசனையை பிரேமதாஸவால் நிராகரிக்க முடியவில்லை. புலிகளும் சாதுரியமாக காய்களை நகர்த்

இந்தப் பொறிக்கிடங்கில் விழுந்து விட புலிகள் விரும்பவில்லை. அத்துடன் இதனைப் பிரச்சனைக்கு உள்ளாக்கி பேச்சுக்களை முறித்துக் கொள்ளவும் விரும்பவில்லை. இதனால் சர்வ கட்சி மாநாட்டில் அவதானிகளாக மட்டும் பங்கு கொள்ள புலிகள் இணங்கினர். அவதானிகள் என்ற அந்தஸ்துடன் புலி கள் வெறும் பார்வையாளர்களாக ஒதுங்கிக் கொண்டது பிரேமதாஸவுக்கு மகிழ்ச்சியையக் கொடுக்கவில்லை. அத்துடன் நேரடியாக பேச்சுக்களை நடத்தி தமது கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு நெருக்குதல் போட்டு வந்ததும் பிரேமதாஸவுக்கு தலையிடியைக் கொடுத்தது.

மெல்ல,மெல்ல புலிகளுக்கும் பிரேமதாஸவுக்கும் மத்தியில் முரண்பாடு தலை

தூக்கத் தொடங்கியது. அரசியல் பிரச்சனைகளைக் கைவிட்டு ஆயுதக்களைவுப் பிரச்சனைக்கு பிரேமதாஸ முதலிடம் கொடுத்தபோது முரண்பாடு மேலும் இறுகியது.

புலிகளைப் புண்படுத்தி விடக்கூடிய ஆயுதக்களைவுப் பிரச்சனையை பிரேமதாஸ நேரடியாக புலிகளுடன் பேசவில்லை. தனது ஊது குழல்களாக அமைச்சர் ஹமீதையும் ரஞ்சனையும் பாவித்தார். அமைச்சர் ஹமீத் மென்மையாக, பக்குவமாக நிதானமாக, ராஜதந்திர மதிநுட்பத்துடன் சிக்கலான பிரச்சனைகளையும் இலகுவாகக் கையாளும் அரசியல் வித்தகர். இதற்கு முற்றிலும் மாறான ஆளுமை படைத்தவர் ரஞ்சன். பண்பான கடிவாளங்கள் எதுவுமின்றி காத்திரமாகப் பேடுபவர். மூர்க்கமாக மோதுபவர். எண்ணத்தை சொல் ஆடைகளால் அலங்கரிக்காமல் நிர்வாணமாக வெளிக்காட்டுபவர். இந்த இரண்டு எதிரும் புதிருமான நாக்குகளால் பிரேமதாஸ பேசினார்.

அமைச்சர் ஹமீத் மிகவும் சாதுரியமாக ஆயுதப்பிரச்சனையை தொட்டார். ஆயுதப் போராளிகளின் எதிர்காலம் பற்றித் தொடங்கி ஆயுதபாணிகளாக புலிகள் நடமாடினால் நிராயுதபாணிகளான ஏனைய குழுக்கள் சுதந்திரமாகத் தேர்தலில் பங்கு கொள்ள முடியாது என்று சுட்டிக் காட்டி சிறிலங்கா இராணுவத்தில் புலிப்படை இணைந்து கொள்ள வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார். மாகாணசபைத் தேர்தல் நடத்துவதென்றால் விடுதலைப் புலிகள் இயக்கம் ஆயுதங்களைக் ஒப்படைத்து இராணுவ அமைப்பைக் கலைத்து விட வேண்டும் என்பதைச் சுற்றி வழைத்து சொற் சிலம்பம் ஆடி பக்குவமாகப் போட்டார். பிரேமதாஸ என்ற அரசனை நம்பி ஆயுதம் என்ற கணவனை கைவிடுவதால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை புலிகள் விளக்கினர். கல்லில் நார் உரித்தாலும் புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைவது சாத்தியமில்லை என்பதை அமைச்சர் ஹமீத் உணர்ந்து கொண்டார்.

அமைச்சர் ரஞ்சனின் அணுகு முறை வித்தியாசமானது. ஆயுதப் பிரச்சனை பற்றி அவர் புலிகளுடன் நேரடியாகப் பேசவில்லை. பத்திரிகையாளர் மாநாடுகளில் புலிகள் இயக்கத்தைப் பகிரங்கமாக மிரட்டினார். புலிகள் ஆயுதங்களைக் கையளிக்க வேண்டும். அல்லாது போனால் ஆயுதங்களைப் பறிக்க வேண்டிய நிர்ப்பந்தம் எழும் என்ற ரீதியில் பேசினார். ரஞ்சனின் இந்த ஆத்திர மூட்டும் அறிக்கைகள் பற்றி புலிகள் பிரேமதாஸவிடம் முறையிட்டனர். அவர் கரடு முரடாகத் தான் பேசுவார். ஆனால் மென்மையான உள்ளம் படைத்தவர். அவர் கூறுவதைப் பற்றி வீணாக அலட்டிக் கொள்ள வேண்டாம். என்று புலிகளை பிரேமதாஸ புலிகளைச் சாந்தப் படுத்தினார். யாருடைய கருத்துக்கள் யாரால் எந்த நாக்கினால் எதற்காக சொல்லப்படுகிறது என்பதைப் புலிகள் புரிந்து கொண்டதால் அவர்கள் இது பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

இது இவ்வாறிருக்க கொழும்பு அரசியல் அரங்கில் இன்னொரு புதிய திருப்பம் ஏற்பட்டது. இத்தனைகாலமும் இந்திய அரசின் கைப்பொம்மைகளாக செயற்பட்டு வடகிழக்கு மாகாண ஆட்சிபீடம் எறி திருமலை நகரில் அரைமைல் விஸ்தரணமுடைய முள்ளுக்கம்பி வேலிக்குள் ஆட்சியை நடத்தி விரக்தி கண்ட ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கம் பிரேமதாஸவின் காலடியில் விழுந்தது. ஈ.பி தலைவர்களுடன் பிரேமதாஸ இரகசியப் பேச்சுக்களை நடத்தியது புலிகளுக்கு சினத்தை ஊட்டியது.

சர்வகட்சி மாநாட்டில்

தொடர்ச்சி 7ம் பக்கம்

## பரிதவிக்கும் மக்கள்

வேதனையே வாழ்க்கை என்று
வாழும் மனித கூட்டமே
சோதனைகள் தொடரும் போது
சோகம் என்ன சொல்லுங்கள்.

நீதிமாறிப் போன மண்ணில்
பரிதவிக்கும் மக்களே
நாதியற்ற வாழ்வு கண்டு
ஏக்கம் என்ன செப்புங்கள்.

பதவிக்காக பேய்கள் கூட்டம்
உயிரிழக்கும் மாந்தரே
உதவியின்றிப்போனபோதும்
தயக்கம் என்ன கேளுங்கள்.

அடிமை என்ற விலங்கு பூட்டி
அவலமுறும் மக்களே
கொடுமை கொண்ட பூமியிது
பீதி என்ன கூறுங்கள்

அதிகார வெறிதனிலே
அல்லல் படும் உயிர்களே
சதிகாரக் கும்பல் கண்டு
நடுக்கம் என்ன இயம்புங்கள்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
முன்னோர் சொன்ன முது மொழி
இன்று இல்லை அதனாலே
எமது பாதை படுகுழி

மரணம் அது ஒருமுறைதான்
மயக்கம் என்ன மானிடா
தருணம் இது தவறவிடின்
விடிவு இங்கே ஏதடா
....பாலன்

## ராஜினி

இன்னும் கொஞ்ச நேரத்தில்
சூரியன் மறைந்துவிடுவான்

இருள் கவிந்து விடும்
இனி வரப்போகிற இருள்
முன்பு போல அல்ல;
பிசாசு.
நிலாவைக் கொலைசெய்து
வெள்ளிகளைப்போட்டெரித்த
சாம்பல் பூசிய இரவு
இந்த இரவுக்கு முன்
ஒரு சிறு கை விளக்கை
அல்லது ஒரு மெழுகு திரியை
ஏற்றி விட வேண்டும்என்று
விரைந்தாய்.
அம்மா!
வேகம் அவர்க்கதிகம் இன்று
தென்திசை நின்று வந்தனர்.
யமனின் தூதர்கள்.
கைத்துப்பாக்கி
ஐந்து குண்டுகள்.
நீ விழுந்த போது
சூரியனின் கடைசிக் கிரணங்கள்
சுவரில் விழுத்திய
உன் நிழல்
கைகளை வீசி மேலே ஓங்கிற்று
முடிவிலி வரை.......
சேரன்-
நன்றி: எலும்புக்கூடுகளின் ஊர்வலம்.

www.padippakam.com

## விளம்பரங்கள்

இப்பகுதியில் பிரசுரிக்கும் விளம்பரம் ஒன்றிற்கு ஐந்து பவுணிலிருந்து விளம்பரக் கட்டணங்கள் அறவிடப்படும்.

## மணமகன் தேவை

*30* வயது நிரம்பிய மெதடிஸ்ட் பெண்ணிற்கு படித்த மணமகன் தேவை. **(EV 10)**

*32* வயது நிரம்பிய பெண்ணிற்கு மணமகன் தேவை. **(EV 11)**

## விளம்பரங்கள் கோரப்படுகின்றன

## மணமகள் தேவை

லண்டனில் தொழில் புரியும் 27வயது நிரம்பிய இந்து மணமகனுக்கு மணமகள் தேவை. மணமகள் 24 வயதுக்குட்பட்டவராகவும் கனடா, ஐரோப்பிய நாடுகளில் அல்லது இந்தியாவில் உள்ளவராக இருப்பின் விரும்பத் தக்கது.
Add. Mr. S. Ahilan
24, Sellin Court Road
Tooting
London SW17 9RJ.

## தேவை

ரூட்டிங் பகுதியில் வொன்ஸ்வோத் பகுதிக்குள் வீடுகள் வாடகைக்குத் தேவை. வீடுகள் வைத்திருப்பவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். வி.இ.வீ*10*.

ரூட்டுங் வுட்பரி வீதியில் சிறிய ஒரு படுக்கையுடன் கூடிய அறை வாடகைக்கு உண்டு. சாப்பாட்டு வசதிகள் செய்து கொடுக்கப்படும். வி.இ.வீ.*11*.

லண்டனில் ஈழபூமிக்கு விற்பனை ஏஜன்டுகள் தேவை. வாகன வசதி உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி. *081 503 4953*

## விசாகனின் கடிதத்திற்கு எமது பதில்

இந்தக் கடிதத்தை எமக்கு அனுப்பி வைத்தமைக்கு திரு. விசாகன் அவர்கட்கு எமது நன்றிகள். தாங்கள் குறிப்பிட்டெழுதிய பெண்விடுதலை பற்றிய விமர்சனமே எமது பத்திரிகைக் குழுவினால் எழுதப்பட்டது. காரை ஒளி தொடர்பான விமர்சனம் நாம் பத்திரிகையை வெளியிடாதிருந்த சமயத்தில் எமக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஒரு வாசகரின் விமர் சனமாகும். இதனால் அந்தக் குறிப்பிட்ட வாசகரின் கருத்துக்களை நாம் மாற்ற விரும்பவில்லை. எனினும் தங்கள் கருத்துப்படி விமர்சனம் இருந்தி ருந்தால் மிகவும் நன்றாய் இருந்திருக்கும் என்பதை நாம் ஏற்பதோடு வருங்காலத்தில் இப்படிப்பட்ட தவறுகள் இடம் பெறாது தவிர்க் முற்படுவோம் என்று உறுதி கூறுகின்றோம். சம்பந்தப் பட்ட விமர்சகர் இதனைக் கருத்தில் கொள்வார் என்றும் நம்புகின்றோம். மீண்டும் தங்களின் ஆக்கபூர்வமான விமர்சனத்துக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

(ஆ-ர்)

# வாசகர் கடிதங்கள்

ஈழபூமி ஆசிரியர் குழுவினர்க்கு,

நீண்ட இடைவெளிக்குப் பின் ஈழபூமி வந்திருப்பதை இட்டு மகிழ்ச்சி. பல பத்திரிகைகள் அகதிகள் வாழும் அந்நிய கலாச்சார சூழலில் வெளிவந்தால் எமது இலக்கிய பாரம்பரியம் புதுக்களை கட்டும் என்பது என் நம்பிக்கை. இக்கடிதம் நூல் விமர்சனம் என்னும் உங்கள் பத்திரிகையின் பக்கம் பற்றியது. அப்பகுதியில் பெண் விடுதலை, காரைஒளி பற்றிய விமர்சனங்கள் இடம் பெற்றிருந்தன. அவை பற்றிய நூல் விவரப்பட்டியல் **(Biblio-graphic Details)** ஆசிரியர், பிரசுராலயம், முகவரி, திகதி, விலை, கிடைக்குமிடம் என்பதையும் கண்டு கொள்ள முடியவில்லை. நூலை விமர்சிக்கும் முன் அவ்விபரங்கள் வாசகட்குத் தரப்படுவது அவசியமல்லவா? காரை ஒளி பற்றிய விமர்சனத்தில் சாதிபற்றியதும், குறுகிய பிரதேசவாதம் பற்றிய கண்டனங்களை நானும் ஏற்றுக்கொள்கின்றேன். கண்டனங்களைக் கூறியதோடு நிறுத்தியிருக்காமல் அப்பத்திரிகை எவ்வகையில் வெளிவருதல் ஆக்கபூர்வமாயிருக்கும் என வழி காட்டப்பட்டிருப்பின் கூடிய நன்மை பயப்பதாக இருக்கும். விமர்சனம் நல்ல பக்கங்களை எடுத்துக்காட்டி ஊக்கப்படுத்தி தவறுகளைக் கண்டு திருத்தி, சரியான பாதை எதுவெனக் காட்டுவதன் மூலமே ஒரு பங்களிப்பைச் செய்யமுடியும்.

அடுத்து ஜ.ரி.சம்பந்தன் என்பவர் ஒரு தனி மனிதர். அவர் தமிழ் தகவல் நிலையத்திலும்வேறு பல ஸ்தாபனங்களிலும் தொண்டராகப் பணிபுரிபவர். எழுத்து அவரது தனிப்பட்ட விடயம். தமிழ் தகவல் நிலையத்தை மட்டும் இழுத்து அவரது கட்டுரையுடன் சம்பந்தப்படுத்தியது தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும். அவர் பங்கு கொள்ளும் ஸ்தாபனங்கள் பலவற்றில் அந்நூலை வெளியிட்டது என உரிமை பாராட்டும் ஸ்தாபனம் காரை அபிவிருத்திச் சங்கமாகும். முழுக்க ஊதியமற்ற வகையில் ஒரு வருடத்தை தொண்டர்களால், பல இன்னல்களுக்கு மத்தியில் பூர்த்தி செய்த தமிழ் தகவல் நடுவத்தைச் சேர்ந்தவர்க்கு இது கவலை அளிப்பதாக உள்ளது. தமிழ் தகவல் நடுவத்தில் குறைபாடுகள், சீர்கேடுகள் இருந்தால் அவற்றைச் சுட்டிக்காட்டி சரியான பாதையில் நடுவம் செல்லப் புத்திமதி கூறியிருந்தால் சந்தோசமடைந்திருப்பேன். வரலாற்றில் சில பாடங்களை நாம் படிக்க வேண்டும்.

மணிக்கொடி பத்திரிகை வெளிவரத் தொடங்கியதும் ஓர் ஆரோக்கியமான வாசகர் கூட்டமும், தலைசிறந்த தமிழ் எழுத்தாளர்களான புதுமைப்பித்தன், ஜெயகாந்தன், பாரதிதாசன், மு.வரதராசன் போன்றவர்களும் உருவாகினர். தமிழ் இலக்கிய வரலாற்றை எழுதுபவர்கள் இக்காலத்தை மணிக்கொடியுகம் என வரையறுத்துள்ளனர். இப்படி ஒரு சிறந்த சேவையை மணிக்கொடி செய்ததால் தனக்கு ஒரு முத்திரையையே பெற்றுவிட்டது.

இதே காலத்தில் மணிக்கொடி குழுவினரால் கடுமையாக விமர்சிக்கப்பட்ட பத்திரிகை இந்துநேசன். இது தனிப்பட்ட நபர்களின் அந்தரங்க விவகாரங்கள், அரசியல் கட்சிகள், ஸ்தாபனங்கள் பற்றிய கிசுகிசுக்களை எழுதி வந்தது. கலைவாணர் என்.எஸ். கிருஸ்ணன். தியாகராஜபகவதர் போன்ற அரிய திரைப்படக் கலைஞர்கள் கலை வாழ்வு சீரழிந்து போக இப்பத்திரிகையே காரணம்.

ஈழ பூமி புலம் பெயர்ந்த தமிழர்களிடையே ஒரு முத்திரையைப் பொறிக்குமா?

ஆர்.எஸ்.விசாகன்.
8,பெப்பர் குளோஸ்
லண்டன்.கி.6.

வாசகர்களிடமிருந்து எமது பத்திரிகை பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.

---

நாடக விழா 92

19-07-92

ஞாயிறு மாலை 6.00 மணி முதல் 10.00 மணி வரை

**WALTHAM FOREST THEATRE**
**LLOYD PARK, WINNS TERRACE**
**WALTHAMSTOW**
**LONDON E17**

**நாடகங்கள்:**

1. தப்பி வந்த தாடி ஆடு (சிறுவர் நாடகம்)
2. மழை
3. இரு துயரங்கள்
4. " துன்பக் கேணியிலே..." (கவிதா நாடக நிகழ்வு)

——— நெறியாள்கை.பாலேந்திரா ———



பிரவேசம்
£ 3.00
£ 5.00 (குடும்பம்)
சிறுவர் இலவசம்

சிற்றுண்டி விற்பனைக்குண்டு

சிறுவர் நாடகம் தவிர்ந்த மற்றைய நாடக நேரங்களில் குழந்தைகளுக்கென பிரத்தியேக வீடியோ காட்சி காண்பிக்கப்படும்.

தமிழ் அவைக்காற்றுக் கலைக் கழகம்

www.padippakam.com

# சன் ரைஸ் ரேடியோவிற்கு எமது பத்திரிகை ஆசிரியர் குழு உறுப்பினர் அளித்த பேட்டி

வானொலி அறிவிப்பாளர்: ஸ்ரீலங்கா இராணுவத்தின் தற்போதைய நிலையும் ஜனாதிபதி பிரேமதாஸவின் அணுகுமுறையும்பற்றி.....

ஈழபூமி ஆசிரியிர் குழு உறுப்பினர்: இன்றைய சூழ்நிலையில் ஸ்ரீலங்கா இராணுவத்தினதும் அரசாங்கத்தினதும் போக்கைப் பற்றி கணித்துக் கொள்வது மிகவும் கடினமாகி வருகின்றது. ஜெயவர்த்தனாவின் ஆட்சிக் காலத்திலே அரசாங்கம் இப்படித்தான் செய்யும் இராணுவம் இப்படித்தான் செயற்படும் என ஊகங்கள் கூறக் கூடியதாக இருந்தது. ஆனால் பிரேமதாஸவின் அணுகுமுறை முற்றிலும் வித்தியாசமானது. இதில் எல்லோரும் எல்லோருக்கும் நண்பர்கள்- எல்லோரும் எல்லோருக்கும் எதிரிகள் என்ற இரண்டும் கெட்டான் நிலை உள்ளது. இது பிரேமதாஸவின் ராஜதந்திர வெற்றி.

உதாரணமாக பிரபாகரனை பிடித்துத் தரும்படி இந்தியா கேட்டபோது 'தம்பி பிழைவிட்டால் பக்கத்து வீட்டுக்காரனா தண்டிப்பது' என நதுக்காக கதைத்தார். அதே போல் இரண்டு வாரங்களுக்கு முன் வவுனியாவில் வைத்துப் பேசும் போது ஒரு குறிப்பிட்ட அணி வெற்றி பெறுவதை நான் விரும்பவில்லை. **I want every body to feel victorious.** என்று கூறினார். வவுனியாவில் இவ்வாறு கதை கூறிக் கொண்டிருக்கும் அதே வேளை கொழும்பில் புதிதாக இறக்கிமதி செய்யப்பட்ட F7 ரக சுப்பசொனிக் குண்டு தாங்கி விமானம் யாழ்ப்பாணத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. இந்த ரக விமானம் 250 ராத்தல் எடையுடைய குண்டுகளை ஒரே நேரத்தில் போடக்கூடிய வல்லமை கொண்டது. இதுதான் பிரேமதாஸவின் பாணி. அதாவது அரசாங்கம் பேசுவது மென்மையாக, அடிப்பது பலமாக என்று **(Government speak soft - Hit hard)**

இன்று இலங்கை அரசின் கை உள்நாட்டிலும் சரி வெளி நாட்டிலும் சரி ஓங்கியிருக்கிறது. அதிலும் குறிப்பாக ராஜீவின் கொலை இதற்கு மிகவும் வழிசமைத்து விட்டது. இன்று தமிழர்களின் நிலையைப் பற்றி ஒருவரும் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. எமது ஓலம் எமக்குள்ளேயே சங்கமமாகிவிடுகிறது.

வா.அ: அரசு இவ்வாறு பலமாக இருப்பது உண்மையானால் யாழ் நகர் மீது ஓர் ஒட்டுமொத்தமான தாக்குதலுக்கு ஏன் அஞ்சுகிறது?

ஈழ: இதற்கு முக்கியமாக இரண்டு காரணங்கள் இருக்கின்றது. முதலாவது, இவ்வாறான தாக்குதலினால் ஏற்படப் போகும் பாரிய உயிரிழப்பும் -அதனால் தற்போது அரசுடன் சார்ந்திருக்கும் குழுக்களின் அதிருப்தியும் மற்றும் சர்வதேச ரீதியில் அது ஏற்படுத்தும் தாக்கமும்.

இரண்டாவது, ஒட்டுமொத்தமான தாக்குதலினால் கைப்பற்றும் இடங்களை நிரந்தரமாக வைத்திருக்கக்கூடிய பலம். அரசைப் பொறுத்தவரை ராணுவரீதியில் தாக்குதல் செய்து இடங்களை கைப்பற்ற முடியும். இதனை வல்வெட்டித் துறையில் ஒப்ரேசன் வலம்புரியில் செய்து காட்டினார்கள். ஆனால் எது பிரச்சனையாக இருக்குமென்றால் இப்படிக் கைப்பற்றும் இடங்களை தொடர்ந்து பாதுகாப்பதென்பது. இன்று புலிகளின் தற்கொலைப் படையின் பலம் உலகில் முதலிடத்தைப் பெறுமளவுக்கு உள்ளது. இதில் போதிய உணர்ச்சி பூர்வமான இளைஞர்கள் உள்ளனர். இவர்களுடைய தாக்குதலை நிச்சயமாக ஸ்ரீ லங்கா இராணுவம் தாக்குப்பிடிக்க முடியாது.

ராணுவத்தில் வெற்றியடைந்துவிட்டு பின்னர் பின்வாங்குவது பாரிய விளைவுகளை ஏற்படுத்தும். இதனை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் அனுபவரீதியாக உணர்ந்திருக்கின்ரனர். ஒப்பரேசன் வலம்புரியின் போது தமது பூரண கட்டுப்பாட்டில் வைத்திருந்த வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற கரும்புலி மில்லரின் தாக்குதலை அவர்கள் இன்னும் மறக்கவில்லை. இதனை முன்னாள் ஜனாதிபதி ஜயவர்த்தனாவே பகிரங்கமாக ஒப்புக்கொண்டார்.

வா.அ: அப்படியானால் இதற்குத் தீர்வு என்ன?

ஈழ: மேற்கூறிய இரண்டு தடைகளினாலும் பிரேமதாஸ தனது காய்களை மிகவும் மெதுவாக நகர்த்துகிறார் புலிகளுக்கும் வெற்றி அரசிற்கும் தோல்வியில்லை என்ற நிலை இன்னும் பலகாலம் நீடிக்கப் போகின்றது.

ஏற்கெனவே மிகவும் கஸ்டப்படும் மக்கள் தொடர்ந்து கஸ்ட்ப்படப்போகின்றார்கள். சுருக்கமாகக் கூறப்போனால் இன்றைய நிலை எவ்விதத்திலும் நம்பிக்கையளிப்பதாக இல்லை. நாய் எப்ப கடிக்கும், பேய் எப்ப பிடிக்கும் என்ற நிலைதான் தமிழ் பேசும் மக்களுக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது.

வா.அ: லண்டனில் வெளிவரும் தமிழ் வெளியீடுகள் பற்றிய உங்கள் அபிப்பிராயம். தமிழ் எழுத்துலகின் நிலை.

ஈழ: லண்டனில் இப்போது ரமில் ரைம்ஸ், ரமில் நேசன், ஈழபூமி, தமிழன், பனிமலர், களத்தில் என வெளியாகும் பத்திரிகைகளின் பட்டியல் நீண்டுகொண்டே போகின்றது. பல பத்திரிகைகள் வெளியாவது உண்மையில் வரவேற்கத் தக்க விடயம்.

ஈழ பூமியைப் பொறுத்தவரை நான் எப்படிப் பார்க்கின்றேன் என்றால், யாழ்ப்பாணத்திலோ மட்டக்களப்பிலோ வெளியாகும் அனைத்துப் பத்திரிகைகளும் புலிகளின் பூரண கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றது. அங்கு புலிகளுக்கு எதிராக எழுதியவர் உயிரோடும் இல்லை, உயிரோடு இருப்பவர் எழுதப்போவதுமில்லை. கொழும்பிலிருந்து வரும் பத்திரிகைகளிலும் பெரிய வித்தியாசம் இல்லை. உத்தியோகபரவமான செய்தித்தாபனமான லங்காப்புவத் தொடக்கம் அனைத்திலும் அரசு தனது ஊதுகுழல்களையே வைத்துள்ளது.

நிலமை இப்படி இருக்கும் போது வெளிநாடுகளில் வாழும் நாங்கள் தான் ஏதாவது திறந்த நோக்குடன் அரசியல் தலையீடுகளின்றி பத்திரிகைகளை வெளியிட இயலுமானவர்களாக உள்ளோம். நாம் இவ் சந்தர்ப்பத்தை பாவித்து தமிழர்களிடையே ஓர் ஒற்றுமையுணர்வையும்- அனைவரையும் இணைத் து கொண்டு செல்லக்கூடிய வேலைத்திட்டத்தை ஊக்கிவிக்க வேண்டும்.

**எமது பத்திரிகை சார்பில் பேட்டி அளித்தவர் காயத்திரி கொன்ஸடன்டைன்.**

# கறுத்த ஜுலை

ஜுலை மாதத்திற்கும் எங்களுக்கும் நிறையத் தொடர்புகள். இப்படிச் சொன்னவுடன் உங்களுக்கு 83 ஜூலை ஞாபகத்திற்கு வரும். கூடவே 87 ஜூலையும்!

இவற்றுடன் கூடவே இன்னுமொன்றையும் நான் ஞாபகப் படுத்த விரும்புகிறேன். நாங்கள் எல்லோரும் மௌனித்திருந்து மறந்து போன விடயம் அது.

என்னவெனில் 88 ஜூலையில் நடந்த விமலேஸ்வரனின் படுகொலையாகும். விமலேஸ்வரனின் படுகொலை அப்படி என்ன தாக்கத்தை நம்மத்தியில் ஏற்படுத்தி விட்டது என்கிறீர்களா?

நிச்சயமாக அது ஒரு பாதகமான நிலையைத் தான் ஏற்ப்டுத்தியுள்ளது. எவ்வாறெனில் தமிழர் தம் போராட்டத்துடன் கூடவே வளர்ந்து வந்த ஜனநாயக மறுப்புப் போக்கும், எதேச்சாதிகாரமும் இரண்டு இடங்களில் கேள்விக்குள்ளானது.

ஒன்று, புளொட்டுக்குள்ளிருந்த ஜனநாயக மறுப்பையும், எதேச்சாதிகாரத்தையும் எதிர்த்து தீப்பொறி குழுவினர் வெளியேறியபோது.

இரண்டாவது, யாழ் பல்கலைக் கழக மாணவன் விஜிதரன் கடத்தப்பட்ட போது நடாத்தப்பட்ட சாகும் வரை உண்ணாவிரத போராட்டத்தின் போது.

இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலுமே விமலேஸ்வரன் காத்திரமான பங்கை ஆற்றி உள்ளார். புளொட்டிலிருந்து தீப்பொறி குழுவினர் வெளியேறிய கால கட்டத்திலேயே விமலேஸ்வரனும் வெளியேறினார் அதே காரணங்களுக்காக.

தமிழர் தம் போராட்டத்தின் மிக முக்கியமான ஜனநாயக கூறாக, மேற்கிளம்பிய தீப்பொறி கனலாகாமல் சாம்பரானது ஒரு துயரம்!

இரண்டாவதாக விஜிதரன் புலிகளால் கடத்தப்பட்ட போது யாழ் பல்கலைக்கழக மாணவர் அனைத்துத் தமிழ் இயக்கங்களையும் நோக்கி இரண்டு முக்கியமான கோரிக்கைகளை முன் வைத்தனர்.

முதலாவது [illegible]ளது பேசும், எழுதும், பத்திரிகை சுதந்திரத்திற்கு யாரும் தடையாக இருக்கக் கூடாது என்பது.

இரண்டாவது ஒருவர் தான் விரும்பிய கட்சியில் சேரவும், அதனை ஆதரிக்கவும், சார்ந்திருக்கவுமுள்ள உரிமை என்பது.

இக் கோரிக்கைகளுக்காகவும் கடத்தப்பட்[illegible] விஜிதரனை விடுதலை செய்யக் கோரியும் சாகும் வரை உண்ணா விரதமிருந்த ஆறு மாணவர்களுள் விமலேஸ்வரனும் ஒருவர்.



விமலேஸ்வரன் ➡

இக் கட்டுரையின் தொடர்ச்சி 8ம் பக்கத்தில்.

## பிரேமதாச எப்படிப்பட்ட.

5ம் பக்கத் தொடர்ச்சி

அவதானியர் என்ற அந்தஸ்திலிருந்து விடுதலைப் புலிகள் விலகிக் கொண்டனர். புலிகளுக்கு எதிரான தமிழ் விரோதக் குழுக்கள் பிரேமதாஸவின் மாய வலைக்குள் சிக்குப்பட்டன.

(தொடரும்)


சகலவிதமான சட்ட ஆலோசனைகளுக்கும் நாடுங்கள்

**RANJIT & COMPANY**
**SOLICITORS**

1st Floor
176, Mitcham Road
Tooting
London SW17 9NJ

**Representation At Police Station**
**Is Covered By Legal Aid**
**All criminal Court Work Under Taken**

* IMMIGRATION
* HOUSING PROBLEMS
* LICENSING

*For All Your Legal Matters Phone*
081 767 9717
FAX : 081 767 9684



இலங்கையிலிருந்தும் பங்களாதேசிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்ட சகல விதமான உணவுப்பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

**Spiceway**

*21-23 Kingston Road*
*London SW19 IJX*
*Tel: 081 540 5526*

**We Sell**

*Halal Meat, Chicken, Tropical Food, Vegetables,*
*&*
*All Kind of Fish Imported from Srsrilanka*
*At reasonable Prices*
*For Futher Details Just Pop in or Ring us on*

**081 540 5526**

www.padippakam.com


We Undertake the following work at reasonable rates:

PRINTING - SINGLE AND MULTI COLOUR
TAMIL & ENGLISH

Letter Heads, Business Cards,
Compliment Slips, Invoices.
Wedding Cards, Invitation Cards.
Leaflets, Posters, Tickets.

For prompt service at reasonable rates
call us on 081-871 2734

NewTec Printers

சகலவிதமான தமிழ் ஆங்கில அச்சு வேலைகளை
நீங்கள் விரும்பியவிதத்தில்
சிறந்தமுறையில் செய்துகொள்ள

நியூ ரெக் அச்சகம்

UNIT 2
GLENVILLE MEWS
KIMBER ROAD
LONDON SW18 4NJ


# புலிகள் நிலை மேல் விமானத் தாக்குதல் பலர் பலி.

(ஆனையிறவு)

ஆனையிறவுக்கு அண்மையில் உள்ள இடம் ஒன்றில் அரச படைகள் மேற்கொண்ட விமானத்தாக்குதல் ஒன்றின் போது இருபத்திஐந்து புலிகள் கொல்லப்பட்டனர் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முள்ளியான் என்ற இடத்திற்கும் ஆனையிறவுக்கும் இடையில் உள்ள இந்த இடத்தில் வெள்ளிக்கிழமை (3-7-92) அன்று அரச படைகள் மேற்கொண்ட திடீர் விமானத் தாக்குதலின் போதே இவ்வாறு புலிகளின் 25 உறுப்பினர்கள் பலியானார்கள் என்று கூறப்படுகின்றது.

ஆனையிறவுக்கு அண்மையில் பதுங்கியிருந்த புலிகளின் உறுப்பினர்கள் பற்றிய தகவல் கிடைத்த இராணுவம் தரைமார்க்கமாகமுன்னேற முடியாமையினாலேயே ஆகாயத் தாக்குதல்களை நடாத்தியதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதனையடுத்து புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போது ஆறு இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டுள்ளனர் என்றும் அன்றைய தினம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது மொத்தம் 50 கும் மேற்பட்ட புலிகள் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் 14 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் இராணுவ தலைமைப் பீடம் பத்திரிகைகளுக்கு தெரிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க, அரசியல் வட்டாரங்களின் கருத்துப்படி புலிகள் பெரும்பாலான உறுப்பினர்களை இழந்துள்ளனர் என்றும் இராணுவ தரப்பிலும் இவ்வாறான சேதம் இருப்பினும் அரசு அதனை உடனுக்குடன் ஈடு செய்ய! போதிய ஆட்களைக் கொண்டிருக்கின்றது என்றும் ஆகவே புலிகளுக்கு இது ஒரு இக்கட்டான சூழ் நிலை என்றும் இதனால் புலிகள் பேச்சு வார்த்தைக்கு சம் மதிக்கத் தள்ளப்படுவார்கள் என்றும் கூறப்படுகின்றது.

அரசின் கவனத்தை வேறு பக்கங்களுக்குத் திசை திருப்பும் பொருட்டு புலிகளின் தாக்குதல்கள் யாழ் குடா நாடு தவிர்ந்த ஏனைய பகுதிகள் மீது முடுக்கி விடப்பட்டுள்ளதாக அரசு வட்டாரங்கள் கருதுகின்றன. இதனால் புலிகளின் தாக்குதல்களை முறியடிக்கும் பொருட்டு அரச படைகள் சமாந்திர தாக்குதல்களை நடாத்தும் என்றும் தலைமைப்பீடம் தெரிவித்துள்ளது.

# சௌண்டிப் விளையாட்டுக் கழகத்திற்கு வெற்றி

(நமது விளையாட்டு நிருபர்)

வொண்ஸ்வேத் தமிழர் நலன் புரிச்சங்கத்தின் விளையாட்டுப் பிரிவில் உள்ள சிரண்டிப் விளையாட்டுக் கழக கிரிக்கெட் அணியினருக்கும் ஹிறீன் போட் கிறிக்கெட் அணியினருக்கும் இடையில் நடந்த 35 ஓவர் போட்டியில் சிரண்டிப் கழகம் வெற்றியைக் கழுவிக் கொண்டது. சிரண்டிப் கழகத்தினரின் மைதானத்தில் ஒன்றான சட்டன் றோஸ் கில் என்ற இடத்தில் உள்ள மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த இந்தப் போட்டியில் சிரண்டிப் கழகம் தனது தொடர்ச்சியான வெற்றியை நிலைநாட்டியது. இதற்கு முன் நடந்த 12 ஆட்டங்களிலும் தனது வெற்றிக் கொடியை நாட்டியிருக்கும் இக்கழகம் ஹிறீன் போட் கழகத்துடன் விளையாடிய முதலாட்டம் இதுவாகும்.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிரண்டிப்கழகம் விக்கட்டுக்களை வேகமாக இழந்தாலும் கழகத்தின் முன்னாள் அணித் தலைவர் ரஞ்சித் என்று அழைக்கப்படும் கந்தையா பாலேந்திராவின் நிதானமான துடுப்பாட்டத்தினால் ஓட்டங்களைக் குவித்துக் கொண்டது. 138 ஓட்டங்களை சகல விக்கட்டுக்களின் இழப்பில் பெற்றுக்கொண்ட சிரண்டிப்பை எதிர்த்து விளையாடிய ஹிறீன் போட் கழகம் முதலில் விக்கட்டுக்களை இழந்தாலும் பின்னர் தொடர்ச்சியாக ஓட்டங்களை குவிக்கத் தொடங்கியது. இருப்பினும் ரஞ்சித்தின் மத்திய வேக பந்து வீச்சுக்கு இலக்காகி நான்கு விக்கட்டுக்கள் போகவே ஹிறீன் போட் கழகம் ஆட்டம் காணத் தொடங்கியது. ரஞ்சித்தின் ஓவர்கள் முடிந்தவுடன் அறிமுகப்படுத்தப்பட்ட சிரண்டிப்பின் சுழல் பந்து வீச்சாளர் ஒஸ்மான் ஒரிரு விக்கட்டுக்களையும் அணியின் தலைவர் பாக்கியராஜ் ஒரு விக்கட்டையும் வினோ ஏனைய விக்கட்டுக்களையும் எடுத்து வெற்றியைத் தமதாக்கிக் கொண்டனர்.

## கறுத்த. . . 7ம் பக்கத் தொடர்ச்சி

எல்லா இயக்கங்களும் இக்கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டன. புலிகளைத் தவிர! இக்கோரிக்கைகள் தம்மை அரசியல் அநாதைகளாக்குகின்றன என்பதன் பேரில். (மக்களுக்கு பேசும், எழுதும், பத்திரிகைச் சுதந்திரத்தை வழங்குவது புலிகளை அநாதைகளாக்குகிறதாம். அவ்வாறாயின் மக்களுக்கு இச்சுதந்திரங்களை மறுப்பது தான் புலிகளின் பலமாம். இதை வைத்துக் கொண்டு புலிகள் மக்களின் நலன்களுக்கு முரணாக இருக்கிறார்கள் என்று நீங்கள் எண்ணினால் அதற்கு நான் பொறுப்பல்ல.)

10 நாட்களாகத் தொடர்ந்த இப்போராட்டம் புலிகளுக்கும் உண்ணாவிரதிகளுக்கும் இடையே இருந்த சமரச சக்திகளாலும், இப்போராட்டத்தை தத்தமது நலன்களுக்கு பாவிக்க சில சக்திகள் முயன்றதாலும் கைவிடப்பட வேண்டியதாயிற்று.

மொத்தத்தில் இரண்டு ஜனநாயகக் கீற்றுக்களுமே அழிக்கப்பட்டுவிட்டன.

88 ஜூலை 18 இல் சைக்கிளில் சென்று கொண்டிருந்த விமலேஸ்வரன் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவரைச் சுட்டதற்கான காரணத்தை புலிகள் இது வரை வெளியிடவில்லை.

பின்னே என்ன கோழிக்கள்ளன், காட்டிக் கொடுத்தான் துரோகி என்று இலகுவாகக் கூறி விடமுடியுமா?

விமலேஸ்வரனிலிருந்து தீப்பொறிவரை இந்த ஜனநாயக மீறலுக்கும், எதேச்சாதிகாரத்திற்கும் பலியாயிற்று. "இந்த ஜனநாயக அத்து மீறல்களுக்கு நாம் குரல் கொடுக்கவில்லை என்றால் தொடர்ந்தும் இதே நிலையைத் தான் கடைப்பிடிக்க வேண்டிவரும்." அதாவது ஒன்றிலும் ஈடுபடாமல் இருக்க வேண்டி. வரும்" என்ற விமலேஸ்வரனின் வார்த்தைகள் தான் இப்போது ஞாபகத்திற்கு வருகின்றன.

துர்வாசன்

கொழும்பிலிருந்து வெளிவரும் சரிநிகர் பத்திரிகையில் இக்கட்டுரை பிரசுரமாயிருந்தது.

## மாதகலில் பயணிகள் வாகனத்திற்கு குண்டு வீச்சு

(மாதகல்)

மாதகல் அந்தோனியார் ஆலய திருவிழாவிற்கு ஓரிரு தினங்களுக்கு முன்னர் அரச விமானப் படைகளின் குண்டு வீச்சுக்கு இலக்காகிய வாகனமொன்றில் பிரயாணம் செய்த 16 பொது மக்கள் ஸ்தலத்திலேயே கொல்லப்படுள்ளனர் இதனால் நடக்க விருந்த ஆலயத் திருவிழா காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இளவாலைப் பகுதியில் அண்மையில் நடந்த அரச படைகளின் தாக்குதலினால் சுமார் 63 பேர் வரை உயிர் நீத்துள்ளார்கள் என்று நம்பகமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வவுனியா தாண்டிக் குளம் தடை முகாமின் அருகே உள்ள காவல் அரண் மீது புலிகள் தாக்கியதில் இரண்டு இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர்.

## தமிழன் அலுவலகத்திற்கு சீல்

(லண்டன் நிருபர்)

லண்டனிலிருந்து வெளி வந்து கொண்டிருந்த தமிழன் என்னும் பத்திரிகை உட்பூசல் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. நிருவாகத்தில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக ஏற்பட்ட குழப்பத்தினால் பத்திரிகை அலுவலகம் சீல் பண்ணப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

## திருமலையில் தாக்குதல்

(திருகோணமலை)

இம்மாதம் 4 ஆம் திகதி அன்று புலிகள் மேற்கொண்ட தாக்குதல் ஒன்றின் போது ஸ்ரீ லங்கா விமானப்படையினர் பலர் கொல்லப்பட்டுள்ளனர் . திருமலையில் உள்ள வேப்பங் குளம் எனும் இடத்தில் இடம் பெற்ற மேற்படி தாக்குதலின் போது 10 விமானப்படையினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டுள்ளனர். இருவர் காயத்துக்குள்ளான அதே சமயம் மேலும் இருவர் காணாமல் போயுள்ளனர் என்று அப்பகுதிச் செய்திகள் தெரிவிக்கின்றன. இத்தாக்குதலின்போது ஆறு புலிகள் மரணித்துள்ளனர் என்று பிறிதொரு செய்தி தெரிவிக்கின்றது.

அண்மையில் பாராளுமன்றத்தில் வெகுசனத் தொடர்பு சாதன அமைச்சர் பேசுகையில் எதிர் கட்சியினர் தம் கொள்கைகளைப் பரப்ப ரூபவாகினியில் இடம் கொடுக்கப்போவதில்லை என பகிரங்கமாக அறிவித்தார்எப்படி இருக்கு எம்மூர் ஜனநாயகம்இத்தனைக்கும் இவர் கனடா வந்து வேறு விஜயம் செய்துள்ளாராம்நல்ல வேளை ஆபிரிக்க நாடொன்றிற்குச் செல்லவில்லை. போயிருந்தால்???

சோலைவனம் போலிருந்து பாலைவனம் ஆகிவிட்ட யாழ் நகரம்



ஈழபூமி தொடர்பான உங்கள் விமர்சனங்களை வரவேற்கின்றோம்.

The Eelabhoomi fortnightly news paper printed & published by. "The Eelabhoomi publications" Telephone 081 503 4952.

படிப்பகம்